Registered as a news paper.                பக்கங்கள்: பன்னிரண்டு                விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035    கார்த்திகை 26 ஆம் நாள்    ஹிஜ்ரி 1427    ஷவ்வால் 28 (11.12.2004)    சனிக்கிழமை    இதழ்:72

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

# தொடரும் வன்முறைகளால் நாட்டில் மீண்டும் யுத்த பீதி!

## தேசிய சமாதானப் பேரவை எச்சரிக்கை

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற வன்செயல்கள் தற்போதைய அமைதி நிலையைச் சீர்குலைத்து, அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மீண்டும் ஒரு யுத்தத்துக்குச் செல்வதற்கான வாய்ப்புக்களை அதிகரித்துள்ளதாக தேசிய சமாதானப் பேரவை எச்சரிக்கை செய்துள்ளது.

எனவே தற்போதைய போர்நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்து பேணுவது தொடர்பாக அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் தமது உறுதிப்பாட்டை வழங்க வேண்டுமெனவும் தேசிய சமாதானப் பேரவை கேட்டுள்ளது.

இது தொடர்பாக சமாதானப் பேரவை மேலும் தெரிவித்துள்ளதாவது -

அண்மைய வாரங்களாக சனத்தொகை மிகுந்த இடங்களில படையினருக்கும், விடுதலைப்புலிகளும் இடையில் பதற்றத்தை அதிகரிக்கும் சம்பவங்கள் இடம்பெற்றன.

கடந்த 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்தத்துக்குப் பின்னர் முதன்முறையாக யாழ்ப்பாணத்தை இணைக்கும் ஏ-9 வீதி மூடப்பட்டது. வன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

2004/05 கல்வி ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கான மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளி விபரம் 11 ஆம் பக்கத்தில்!

## மின்சாரம் தாக்கியதில் இளைஞர் உயிரிழப்பு!

அராலிப் பகுதியில் மின்சாரம் தாக்கிய இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

அராலிப் பகுதியில் வசிக்கும் பேரம்பலம் ஜெயக்குமார் (வயது 21) என்ற இளைஞர் நேற்று மாலை 4.30 மணியளவில் தொலைக்காட்சி பார்ப்பதற்காக மின் இணைப்புக் கொடுக்க முற்பட்டார்.

இதன்போது, மின்சாரம் தாக்கியதில் மேற்படி இளைஞர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

மின் இணைப்பில் ஏற்பட்ட மின் ஒழுக்கே இந்தப் பரிதாப சம்பவத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. உயிரிழந்த இளைஞனின் சடலம் யாழ். போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## மனித உரிமைகள் ஆணைக்குழு முன் அன்னையர் முன்னணி ஆர்ப்பாட்டம்!

காணாமற்போன தமது உறவினர்களின் நிலை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் பேசுவதற்கு, ஏற்பாடுகளைச் செய்து தருமாறு கோரி யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு முன்பாக -

அன்னையர் முன்னணி மற்றும் காணாமற்போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்றுக் காலை 10.30 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், வண. பிதா ஜெயக்குமார் அடிகளாரும், அன்னையர் முன்னணி உறுப்பினர்களும், காணாமற்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்களும் - கைகளில் மெழுகுவர்த்திகளை ஏந்தியவாறு காணாமற்போனவர்களுக்காக சிறிது நேரம் பிரார்த்தனையில் ஈடுபட்ட பின்னர் தமது போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து, யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி றுவான் சந்திரசேகராவிடம் - அன்னையர் முன்னணித் தலைவி கனகாம்பிகை மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

இந்த மகஜரை, தாம் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி, அவர்களின் முடிவை அறிவிப்பதாக யாழ். அலுவலக அதிகாரி சந்திரசேகர தெரிவித்தார்.

இந்த மகஜரில் 1996, 1997 ஆம் ஆண்டுகளில் காணாமற்போன பிள்ளைகளின் நிலைமை தொடர்பாக அறிவதற்கு பல அதிகாரிகள் மூலமாக முயற்சியெடுத்த போதும், எதுவும் பயனளிக்கவில்லை. இதனையடுத்து இந்த வருட ஆரம்பத்தில் ஜனாதிபதியைச் சந்திக்க கொழும்புக்குச் சென்றபோதும், சந்திப்பதற்கு நேரம் இல்லை எனத் தெரிவித்து, தனது செயலாளரைச் சந்திக்குமாறும் கூறிவிட்டார்.

இதற்கமைய அவரது செயலாளரைச் சந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்புப் பட்டிகளை அணிந்துகொண்டு கூட்டமைப்பு எம்.பிக்கள் வாக்களிப்பு!

நிதித் திட்டமிடல் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டின் மீதான வாக்கெடுப்பின்போது, தமிழத் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கறுப்புத் துணியால் வாயைக் கட்டிக்கொண்டு, கறுப்புத் துணியைப் போர்த்துக்கொண்டு எதிர்த்து வாக்களித்தனர்.

மனிதஉரிமைகள் தினமாகிய நேற்று, தமிழ் மக்களின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அதனை வெளிக்காட்டும் வகையிலுமே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கறுப்புத் துணிகளை அணிந்தவாறு வாக்கெடுப்பில் கலந்துகொண்டனர்.

நேற்றுக்காலை இடம்பெற்ற நிதித் திட்டமிடல் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தைத் தொடர்ந்து மாலையில் இடம்பெற்ற வாக்கெடுப்பின்போது, ஐக்கிய தேசியக் கட்சியினர் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

வாக்கெடுப்பு ஆரம்பமாகிய வேளையில் ஐ.தே.க உறுப்பினர்கள், தமது ஆசனங்களில் இருந்து பதாதைகளுடன் எழுந்து நின்று பெரும் கூச்சலிட்டனர்.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவை விடுதலை செய்யவேண்டும் எனக் கோரி பெரும் சத்தமிட்டதுடன், வாக்களிப்பையும் குழப்ப முற்பட்டனர்.

இந்த வாக்கெடுப்பின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து, மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன், முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்த்து வாக்களித்தனர்.

இதேவேளை இந்த வாக்களிப்பில் ஐக்கிய தேசியக் கட்சியினர் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## எழுத்தாளர் சொக்கன் 74 வயதில் காலமானார்!



ஈழத்தின் மூத்த எழுத்தாளரான சொக்கன் நேற்று நண்பகல் காலமானார். கந்தசாமி செட்டி சொக்கலிங்கம் என்ற இயற்பெயரையுடைய எழுத்தாளர் சொக்கன், சமீபகாலமாக நோயுற்றிருந்தார்.

இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையிலேயே நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் காலமானார்.

74 வயதான சொக்கன் ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தனது இறுதிக் காலத்தில் நாயன்மார்கட்டில் தற்காலிகமாக வசித்துவந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# எமது விடுதலைப்போரின் அடிப்படையே மனித உரிமைகளை மீட்டெடுப்பதுதான்!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் மனித சமத்துவம், விழுமியம் போன்ற உயர்ந்த சிந்தனையுடன் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் செயலாற்றி வருவதாக தமழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று கிளிநொச்சியிலுள்ள வடக்கு - கிழக்கு மனிதஉரிமைகள் செயலகத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் கலந்துகொண்டு பேசும் போதே சு.ப தமிழ்ச்செல்வன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது -

மனித உரிமைகள் தினத்தை முன்னெடுக்கும் அளவுக்கு நாங்கள் உயர்ந்திருக்கின்றோம். ஒடுக்குமுறை, மனிதஉரிமைமீறல் என்பன உச்ச நிலையில் இருக்கும் இந்த நேரத்தில் இதனை எதிர்த்து இவ்வாறு ஒரு நகர்வை நாம் முன்னெடுப்பது மன நிறைவைத் தருகிறது.

இந்த வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் ஆரம்பிக்கப்பட்டு சில காலங்களிலேயே சர்வதேச மட்டத்திற்கு எமது மக்களின் பிரச்சினைகள் பலவற்றை கொணடு சென்றிருக்கின்றது.

இந்த விடுதலைப்போராட்டம் எமது உரிமைப் போராட்டம். இதன் அடிப்படை மனித உரிமைகளை மீட்டெடுப்பதேயாகும்.

தென்னிலங்கையில் பலர் இந்த மனித உரிமைகளைப் பற்றிக் கதைப்பதற்கு பட்டங்களும் பதவிகளும் கொடுத்து நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

எங்களுடைய பிரதேசத்தில் கல்வியறிவாளர்கள், புத்திஜீவிகள், மதகுருமார்கள்,

(12 ஆம் பக்கம் பார்க்க)



# பரந்தாமன் ஆச்சிரமத்திற்கு நாளை அடிக்கல் நாட்டுவிழா

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள பரந்தாமன் ஆச்சிரமத்திற்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

பரந்தாமன் ஆச்சிரமத்தின் நிர்வாக சபைத் தலைவர் கி.ஜெயககுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவர் இ.அன்னலிங்கம், தமிழ்த் தேசிய கூட்மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான் எம்.கே.சிவாஜிலிங்கம், செ.கஜேந்திரன், கே.சிவநேசன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும்,

பருத்தித்துறை பிரதேசசபையின் செயலாளர் சி.பசுபதி, கிராம அலுவலர் மு.சிவசண்முகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், ஆலயத்தின் பிரதான குருக்களான பிரமஸ்ரீ ச.க.சுதர்சனக்குருக்கள், பிரமஸ்ரீ ச.க.புருஷோத்தம குருக்கள், பருத்தித்துறை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் எம்.கல்யாணி, யாழ்.மாவட்ட வெண்மை வாணிப சங்கங்களின் ஒன்றியத் தலைவர் கி.பாலராஜ் ஆகியோரும் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்வார்.

# கால்நடை உபஅலுவலகத்தை வல்வெட்டித்துறையில் அமைக்குக

## அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

வல்வெட்டித்துறைப் பகுதியில் கால்நடை வைத்தியசாலையின் உப அலுவலகம் ஒன்றை ஆரம்பிக்குமாறு வல்வெட்டித்துறை, தொண்டைமனாறு, பொலிகண்டி உடுப்பிட்டி ஆகிய பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சிக்குரிய கால்நடை வைத்திய அலுவலகம் புலோலியில் உள்ளது. எனவே வல்வெட்டித்துறை, பொலிகண்டி, தொண்டைமனாறு மக்கள் இரண்டு பேருந்தில் பயணம் செய்தே புலோலியில் உள்ள வைத்திய நிலையத்துக்கு வந்து தமது தேவையை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

எனவே அந்தப் பகுதியில் உப அலுவலகம் ஒன்றை அமைத்து வாரத்தில் ஓரிரு நாட்கள் இயங்கினாலே தமது தேவைகளை நிறைவேற்றலாம் என மக்கள் தெரிவிக்கின்றனர். (14)

# பாலபண்டிதர் தெரிவுக்கான விண்ணப்பம் கோரப்பட்டது

சைவபரிபாலன சபை நடாத்தி வரும் சைவசித்தாந்த பிரதேச பாலபண்டிதர் தேர்வுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இந்த தேர்வில் பங்குபற்ற விரும்புவோர் நீராவிடியடியில் அமைந்துள்ள சைவபரிபாலன சபை அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்று எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு தேர்வுச் செயலாளர் வ.கந்தசாமி தெரிவித்தார்.

பிரதேச பாலபண்டிதர் பரீட்சை அடுத்தவருடம் வைகாசி மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# தியான விழிப்புணர்வும் ஆன்மீகப் பேருரையும்

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை ஆன்மீக விழிப்புணர்வு வட்டத்தின் அனுசரணையுடன் 'கர்மயோகம்' 'தியான விழிப்புணர்வு' ஆன்மீக பேருரைகள் நாளையும், நாளை மறுதினமும் யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் பிற்பகல் 5 மணிமுதல் 6 மணிவரை இடம்பெறவிருக்கிறது.

இந்த ஆன்மீக பேருரைகளை இந்தியாவின் ரிஷிகேசத்து ஞான பீட சுவாமி யோகேஸ்வரானந்தா நிகழ்த்துவார். இந்த ஆன்மீக பேருரையில் ஆர்வமுடைய அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு யாழ் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவரும் ஆன்மீக விழிப்புணர்வு வட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளனர்.

கந்தர்மடத்தில் உள்ள ஆனந்தா ஆச்சிரமத்தில் 14ஆம் திகதி முற்பகல் 10.00 மணிமுதல் 11.30 மணிவரை சுவாமிகளின் சற்சங்கமும் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்விலும் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளன.

## ஆன்மீக சொற்பொழிவு

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான வளவில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெற்றுவரும் சொற்பொழிவுத் தொடரில் நாளை 10.30 மணிக்கு "காரைக்கால் அம்மையார்" எனும் தலைப்பில் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் ம.பங்கயன் சொற்பொழிவாற்றவுள்ளார். (14)


## என்றும் எங்கும் இல்லாத கொள்ளை மலிவு

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க நத்தார் பண்டிகை, புதுவருடத்தை முன்னிட்டு உங்கள்



லைடன் புடவை நிலையத்தில்

CHRIST'MAS SALE

05.12.2004 தொடக்கம் 31.12.2004 வரை

விசேடகழிவு விலையில் சகலவித ஆடைகளையும் உங்கள் எண்ணம்போல் புத்தம் புது நவீன டிசைன்களில் பெற்றுக்கொள்ள

லைடன் புடவை நிலையம்

ஞாயிற்றுக்கிழமைகளான 12, 19 / 12 / 2004 ஆகிய திகதிகளில் எமது புடவை நிலையம் திறந்திருக்கும்.

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 – 2381

(C/3437)


## கூரைவிரிப்புக்கள் வழங்கல்

தென்மராட்சி பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் கூரைவிரிப்புக்களை வழங்கியுள்ளது. தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் இந்த கூரைவிரிப்புக்கள் விநியோகிக்கப்பட்டன. (29)

## இலவச கண் பரிசோதனை முகாம்

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகமும் வட்டு.கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையும் இணைந்து நாளை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை கார்த்திகேசு வித்தியாலயத்தில் இலவச கண்பரிசோதனை முகாம் ஒன்றை நடத்தவுள்ளது.

இதில் அப்பகுதியில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்குட்பட்டவர்களும், பாடசாலை மாணவர்களும் கலந்து பயன்பெறலாம் என்று லயன்ஸ் கழகம் தெரிவித்துள்ளது. (44)

## பருத்தித்துறை டிப்போவுக்கு புதிய பொறுப்பதிகாரி

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவின் பொறுப்பதிகாரியாக ரி.யோகநாதன் இந்த மாதம் முதல் நியமிக்கப்படுகிறார்.

இவர் இதுவரையும் யாழ் மத்திய பஸ்நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வந்துள்ளார்.

பருத்தித்துறை பஸ் டிப்போவின் பொறுப்பதிகாரி ஓய்வுபெற்றுச் சென்றுள்ளதை அடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டார்.

## பல்கலைக்கழகத்தில் ஸ்பானியத் திரைப்படம்

யாழ்.பல்கலைக்கழகத் திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் "ஹவுஸ் ஒப் பேனாடா அல்பா" எனும் ஸ்பானிய மொழித் திரைப்படம் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் வீடியோக் காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது.

'காசியா லோகா' எனும் புகழ்மிக்க ஸ்பானிய நாடக ஆசிரியரின் நாடகத்தைத் தழுவி உருவாக்கப்பட்ட இந்தத் திரைப்படம் பல சர்வதேச விருதுகளைப் பெற்ற படமாகும்.

படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர்கள் அ.யேசுராசா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறியாள்கையின்கீழ் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும்.


நிறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், நிகிதா நடித்த

சத்ரபதி (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

SPIDER MAN - 2

ராஜா யாழ்ப்பாணம்.

சில தினங்கள் மட்டும்

இந்தியாவில் 200 நாட்கள் ஓடிய வெற்றிச் சித்திரம்

சேரன், சிநேகா, கோபிகா நடித்த

ஆட்டோகிராப் (ரீல்ஸ்)

புதிய நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.

இளைய தளபதி விஜய், சங்கவி, (குளிரூட்டப்பட்டது)

கவுண்டமணி, செந்தில் நடித்த

கோயம்புத்தூர் மாப்பிள்ளை (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30.2.30 (பு.நே)

தினசரி இரவு 6.30, 9.00 [பு.நே]

THE LORD OF THE RINGS

நாகம்ஸ் சுன்னாகம்

அஜித், பூஜா மற்றும் பலர் நடித்த

அட்டகாசம்

கா.நே 11.00, 3.00, 7.00 (பு.நே)

மிக விரைவில்
அடுத்த வெளியீடு
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதினம்
அர்ஜுன், லைலா, வடிவேல் நடித்த



ஜெய் சூர்யா


## 20ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் ஏழு மாத தொழில்சார் பயிற்சி

பாடசாலையை விட்டு விலகியோருக்கான ஏழுமாத தொழில்சார் பயிற்சிகள் ஜனவரி முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

தமிழ்சுருக்கெழுத்து தட்டச்சு, ஆங்கில தட்டச்சு பயிற்சிகள் வாரத்தில் ஏழு நாட்களும் நடைபெறும். பயிற்சிப் பகுப்பாய்வுகள் அரச அலுவலகங்களில் 6 மாத காலசெயன்முறைப் பயிற்சிபெற ஒழுங்கு செய்யப்படும்.

ஆர்வமுடையோர் கழகத்தில் நேரடியாகத் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தினைப்பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்குமாறு செயலாளர் தெரிவித்தார்.

# சங்கானை கிராம அலுவலர் 25 பேருக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராம சேவகர்களுக்கான உள்ளக இடமாற்றம் ஒன்றை சங்கானை செயலகம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

சங்கானை பிரதேசசெயலர் பிரிவுக்கு உட்பட்ட 25 கிராம சேவகர்களுக்கே இந்த இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாத நடுப்பகுதியிலேயே இவ்விடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரியவருகிறது.

இவ்விடமாற்றத்துக்கான நிபந்தனைகளாக சேவைக்காலம், சேவை செய்த இடம் என்பன கருத்தில் கொள்ளப்பட்டு சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட கிராமஅலுவலர் பிரிவுகளுக்குள்ளே இவ்விடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிய வருகிறது.

## மூவி மென்டோ நிறுவனம் மீனவர்களுக்கு உதவி

வடமராட்சி வடக்குப் பிரதேச கடற்றொழிலாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் "மூவிமெண்டோ" நிறுவனம் கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்கியுள்ளது.

10 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் ஒவ்வொரு மீனவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. யுத்த அனர்த்தங்களால் சொத்துக்களை இழந்த கடற்றொழிலாளர்களை அப்பகுதி கிராம சேவகர் மூலம் தெரிவுசெய்து உபகரணங்கள் வழங்கப்பட்டன.

## இளைஞன் காயம்

பாரவூர்தியில் பயணம் செய்த இளைஞர் நிலத்தில் வீழ்ந்து காயம் அடைந்துள்ளார்.


வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த கொண்டிருந்த பாரவூர்தி ஆனையிறவு வெளியில் வேகமாக ஓடிக்கொண்டிருந்த வேள்ள தவறி வீழ்ந்ததிலேயே இளைஞருக்கு காயம் ஏற்பட்டுளது. இந்தச் சம்பவத்தில் அரியாலையைச் சேர்ந்த கஜேந்திரன் (வயது - 20) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## நாற்பது மாணவர்களுக்கு பாடசாலை உபகரணம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை மக்கள் வங்கியில் சிசு உதான கணக்கு வைத்துள்ள சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 40 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களான பிளாஸ்ரிக் சாப்பாட்டுப் பெட்டி, தொப்பி ஆகியன மக்கள் வங்கியால் வழங்கப்பட்டது.



வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற நாவலர்நினைவுப் பேருரையின்போது சைவப் புலவர் வ.கந்தசாமியின் சேவை நலனைப் பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் வித்தியாலயத்தின் அதிபர் சிவராஜா நினைவுப் பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம்.


## பிறந்தநாள் வாழ்த்து



விக்கினேஸ்வரன் சர்மியா

இறக்கம் பத்தை வல்வெட்டியைச் சேர்ந்த விக்கினேஸ்வரன் பிரியா தம்பதிகளின் செல்வப் புதல்வி சர்மியா தனது முதலாவது பிறந்தநாளை 11.12.2004 இன்று வல்வெட்டியிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார்.

சர்மியாவை அன்பு, அப்பா, அம்மா, அக்கா சாருஜி, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியமாமா, சித்தா, அன்ரா, குட்டிமாமா, மாமா, பெரியத்தை, சின்னத்தை, அத்தை, மச்சாள்மார், மச்சான் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம்வாழ எல்லாம் வல்ல விநாயகப்பெருமானை வேண்டி வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
திரு. திருமதி விக்கினேஸ்வரன்

(C/3455)

# திஸநாயக்கவை விடுதலை செய்யும்வரை போராட்டம் நடத்தப்போவதாக எச்சரிக்கை

(கொழும்பு)

நீதிமன்றை அவமதிக்கும் வகையில் உரையாற்றினார் எனத் தெரிவிதது, தொடரப்பட்ட வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட எஸ்.பி. திஸநாயக்காவுக்கு 2 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், அவரை விடுதலை செய்யும் வரை தொடர் போராட்டங்களை நடத்தப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரட்ண மற்றும் மஹிந்த விஜேசேகர ஆகியோரே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

உயர் நீதிமன்றத் தீர்ப்பு வெளிவருவதற்கு முன்னரேயே பொலநறுவையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் அநுரா - அடுத்த புதுவருடத்தை எஸ்.பி திஸநாயக்க சிறையிலேயே கொண்டாடுவார் எனத் தெரிவித்திருந்தார்.

உயர் நீதிமன்றை அவமதித்ததாக எஸ்.பிக்குச் சிறைத்தண்டனையை வழங்கிய படியால், நீதிமன்றத் தீர்ப்பை அநுரா முன்னரே தெரிவித்திருப்பதால், அவர் மீது வழக்குத் தொடரமுடியும்.

எஸ்.பியின் நீதிமன்ற அவமதிப்பு உரையை 31 தடவைகளுக்குமேல் தேசியத் தொலைக்காட்சி ஒளிபரப்பியது. இதுவும் உயர்நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும். எனவே, இதற்கு எதிராகவும் வழக்குத் தொடர முடியும்.

நாம் இருவரும், வேறு சிலரும் வெலிக்கடைச் சிறையிலுள்ள எஸ்.பியைப் பார்வையிடச் சென்றபோது, சிறைச்சாலை அதிகாரி அனுமதி வழங்க மறுத்துவிட்டார். இது எமது நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறும் செயல்.

அரச தரப்பினரும், எஸ்.பிக்கு வழங்கப்பட்ட தீர்ப்புக்கெதிராகக் குரல் கொடுக்கவேண்டும். இந்தக் கைதை சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்லவுள்ளோம். இந்திய லோக்சபா உறுப்பினர்களும் இந்தக் கைதுக்கு எதிராகத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

தற்சமயம் பிற கட்சியினருடனும், மதக்குழுக்களுடனும் பேச்சு நடத்தி வரும் நாம், எதிர்வரும் 21 ஆம் திகதி இந்தக் கைதுச் சம்பவத்தை ஆட்சேபித்துக் கொழுமபு கைபார்க் சதுக்கத்தில் மாபெரும் போராட்டமொன்றை நடத்தவுள்ளோம் எனத் தெரிவித்தனர்.

இதேவேளை - இந்தக் கைதை எதிர்க்கும் வகையில் மஹிந்த விஜேசேகர தலைமையில் ஜனநாயக மீட்புக் குழுவொன்று அமைக்கப்படவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (01)

# அரசியல்வாதிகள் மீது இலஞ்ச ஊழல் புகார்

(கொழும்பு)

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக அரசியல்வாதிகளுக்கு எதிராக 34 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் ஆணையாளர் கிங்ஸ்லி விக்கிரமரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் உட்பட பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசியல்வாதிகள் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

இந்த முறைப்பாடுகளில் 13 முறைப்பாடுகள் போதிய ஆதாரங்கள் இன்மையால் நிராகரிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழகத்திலிருந்து 23 அகதிகள் தாயகம் திரும்பினர்

தமிழகத்திலிருந்து 23 ஈழத் தமிழ் அகதிகள் கடல் வழியாகத் தாயகம் திரும்பினர்.

இந்திய மீனவர்களால் அழைத்து வரப்பட்டு, மணல் திட்டியில் இறக்கி விடப்பட்ட 9 பேர் கடற்படையால் மீட்கப்பட்டுத் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் சிவில் அதிகாரிகளினால் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இதைத்தவிர மேலும் 14 பேர் நேற்றுமுன்தினம் மாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, தலைமன்னார் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட பின்னர் சொந்த இடங்களுக்கு இவர்கள் அனுப்பி வைக்கப்படுவார்கள்.

# சேது சமுத்திரத் திட்டம் குறித்து இந்தியாவுடன் கலந்துரையாடல்!

## லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு

(சென்னை)

இந்திய மத்திய அரசால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள சேது சமுத்திரத்திட்டம் குறித்து, இலங்கைக்குள்ள அச்சம் தொடர்பாக இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.



புதுடெல்கிக்கு விஜயத்தை மேற்கொண்ட அவர், கொழும்பு திரும்பும் வழியில், சென்னை விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

சேது சமுத்திரத் திட்டம் குறித்த திட்டத்தை நாம் படித்துள்ளோம். எனவே இது தொடர்பாக நாம் இந்திய மத்திய அரசுடன் கலந்துரையாடவுள்ளோம்.

இலங்கை கடற்படையால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து, எமது அரசாங்கம் ஆழமாக ஆராய்ந்து வருகிறது. எனவே இதற்கான தீர்வு விரைவில் காணப்படும்.

அத்துடன், சமாதானப் பேச்சுக்களைத் தொடர வேண்டுமென்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக உள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையைச் சேர்ந்த ஓவியர் சிங்கப்பூரில் வைத்து கைது!

## போதைப்பொருள் வைத்திருந்தாராம்

இலங்கையைச் சேர்ந்த ஓவியர் ஒருவர் உட்பட, 13 பேர் சட்ட விரோதமாக கான்னபிஸ் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பெயரில், சிங்கப்பூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

ஜேர்மி மகேன் சண்முகம் என்ற இலங்கையரே சிங்கப்பூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவராவார்.

குறிப்பிட்ட நபர் கைது செய்யப்பட்டபோது மருத்துவ சிகிச்சைக்காக அவுஸ்ரேலியா செல்வதற்கு விசா விண்ணப்படிவம் சமர்ப்பித்திருந்தார் என, சிங்கப்பூரிலுள்ள அவுஸ்ரேலிய தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட நபரின் விசா விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் புதன்கிழமை சிங்கப்பூர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

குறிப்பிட்ட நபருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிருபிக்கப்படுமிடத்து, இவர் 10 வருட சிறைத்தண்டனையை எதிர்கொள்ள வேண்டிவரும் எனத் தெரிவிக்கப்பட்டுளளது. உலகிலே போதைப் பொருள் பாவனை தொடர்பாக இறுக்கமான நடைமுறைகள் கடைப்பிடிக்கும் நாடுகளில் சிங்கப்பூரும் ஒன்றாகும்.



இராணுவக் காவலரண்களை அகற்றுமாறுகோரி திருகோணமலையில் தமிழ்ப் பெண்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காட்சி. (04)

# கடற்படையினரின் தாக்குதலில் தமிழக மீனவர்களின் இழுவை படகு மூழ்கியது!

(சென்னை)

கச்சதீவுக் கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது, இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் தமிழக மீனவருக்குச் சொந்தமான படகொன்று மூழ்கடிக்கப்பட்டதாக தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

கச்சதீவுக் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்களின் படகுகள் மீது, இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு படகு மூழ்கடிக்கப்பட்டது. தாக்குதலின் பின்னர் அந்தப் பகுதிக்குச் சென்ற கடற்படையினர் மற்றைய மீனவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும் பறிமுதல் செய்தனர்.

கடற்படையினரின் தாக்குதலில் மூழ்கிய படகிலிருந்த நான்கு மீனவர்கள் தாக்குதல் நடந்த வேளை கடலில் பாய்ந்து நீந்தி தனுஷ்கோடி கரையை அடைந்தனர்.

மீனவர்கள் கரையை அடைந்த பின்னர் கடற்படையினரின் தாக்குதல் தொடர்பாக மீன்பிடித் திணைக்களத்தில் முறையிட்டுள்ளதாகத் தமிழ் நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை - தமது வழமையான ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் நயினாதீவு கடற்பகுதியினுள் அத்துமீறிப் பிரவேசித்த மூன்று றோலர்களை கைது செய்ததாகப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மூன்று றோலர்களிலும் 13 மீன்பிடி வலைகள், 6 ஐஸ் பெட்டிகள், இரண்டு மண்ணெண்ணை அடுப்புக்கள், 300 லீற்றர் டீசல் மற்றும் இரண்டு வானொலிப் பெட்டிகள் சில பொருட்கள் என்பன இருந்ததாகவும், இவையனைத்தும் றோலருடன் சேர்த்து விசாரணைக்காக ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் படைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

# எஸ்.பி.திஸநாயக்கவுக்கு எதிராக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவும் வழக்கு

(கொழும்பு)

உயர் நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றத்துக்காக இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனையை அனுபவித்து வரும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவுக்கு எதிராக லஞ்சஊழல் தடுப்பு ஆணைக்குழு இன்னும் ஓர் வழக்கைத் தாக்கல் செய்யவுள்ளது.

சட்ட மா அதிபர் திணைக்களம் இதற்குரிய குற்றப் பத்திரிகையை தயாரித்துள்ளது. அடுத்த சில வாரங்களுக்குள் இந்த வழக்கு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுமென, லஞ்சஊழல் தடுப்பு ஆணைக்குழு தெரிவித்தது.

கடந்த அரசாங்க காலத்தில் சமுர்த்தி நிதியில் இடம் பெற்ற நிதி ஊழல் மோசடி தொடர்பாக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவுக்கு எதிராகக் கிடைத்த முறைப்பாடுகள் குறித்து, லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு விசாரணைகளை நடத்தியது. சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அடிப்படையில் அவர் மீது வழக்கு தொடரத் தேவையான சாட்சியங்கள், ஆதாரங்கள், ஆவணங்கள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

# லண்டனில் மிகவிரைவில் புதிய தமிழ் வானொலி

லண்டனில் புதிதாகச் சர்வதேச தமிழ் வானொலி என்ற பெயரில் பதிவு செய்யப்பட்ட தமிழ் வானொலியொன்று உருவாகி வருகிறது. இந்த வானொலிக்கான அனுமதிப் பத்திரத்தைப் பிரித்தானிய வானொலி அனுமதிப் பத்திரக் கட்டுபாட்டு நிறுவனம் வழங்கியுள்ளது.

இந்த வானொலிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டமை வானொலிக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் வருட முடிவுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் உருவாக்கம், இதன் நிர்வாக உறுப்பினர்களின் தகவல்கள் இதுவரை வெளிவராத நிலையில் இந்த வானொலி மிகவிரைவில் ஐ.ஆர்.ரி என்ற பெயரில் இயங்க இருப்பதாகத் தெரியவருகிறது.

# அமெரிக்கத் தூதரகம் மீது தாக்குதல்! இலங்கை முஸ்லிம் இரகசியத் தொடர்பு

சவுதியின் ஜெட்டா நகரில் அமைந்துள்ள அமெரிக்க அலுவலகம் மீது, இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதலுக்கும், இலங்கை முஸ்லிம் ஊழியர்கள் சிலருக்கும் தொடர்பு இருப்பதாக நம்பகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்கத் தூதரகத்தின் மீதான தாக்குதலுக்கான தகவல்களை அங்கு கடமையாற்றிய இலங்கை முஸ்லிம்கள் வழங்கியதாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இவர்களின் ஆதரவுடனேயே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனவும், இந்த அலுவலகத்தின் பிரதான வாயிற்பகுதியை நோக்கி கிளர்ச்சிவாதிகள் குண்டுத் தாக்குதல்களை நடத்தியபோது, அந்த இடத்தில் நிற்கவேண்டிய இலங்கை முஸ்லிம் நபர் சில நிமிடநேரத்துக்கு முன்னரே அந்த இடத்திலிருந்து அகன்று சென்றதாகவும்,

நண்பர் ஒருவரின் தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்தே அவர் அகன்று சென்றதாகவும், ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து அமெரிக்க உளவுப்பிரிவினருக்குத் தெரியவந்துள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக - பேருவளையைச் சேர்ந்த இலங்கையரான அப்துல் ஜபார் மொகமட் ஜெலோஸ் என்பவருக்குத் தகவல் தெரிவித்திருந்தாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் நான்கு இலங்கையர்களும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# முதல் டெஸ்டில் 184 ஓட்டங்களில் பங்களாதேஷ் அணி சுருண்டது!



(டாக்கா)

இந்திய அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி 184 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

நேற்று டாக்காவில் முதல் டெஸ்ட் போட்டி ஆரம்பமானது. ஆட்டம் காலை 9.30 மணிக்குத் தொடங்குவதாக இருந்தபோதும், நேற்று முன்தினம் பெய்த மழையால் மைதானம் ஈரமாக இருந்ததால், மதிய உணவு இடைவேளைக்குப் பின்னரே போட்டி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட பங்களாதேஷ் அணியை அழைத்தது.

அந்த அணியின் ஜாவித் ஓமரும், நபீஸ் இக்பாலும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினார்கள். அணியின் ஓட்ட எண்ணிக்கை 8 ஆக இருந்தபோது - ஓமர், பதான் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார். இதையடுத்து பஷார் 2 ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக இக்பாலுடம் இணைந்தார்.

இக்பால் 20 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அவரது விக்கெட்டையும் பதான் கைப்பற்றினார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 29 ஆக இருந்தது. அதே ஓவரில் பதான் மேலும் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். அவர் ரஜின் சலாக்கை- எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழக்கச் செய்தார். அடுத்து 4 ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக அஷ்ரபுல் - பஷாருடன் இணைந்தார். பங்களாதேஷ் அணி 6 ஓட்டங்களைச் சேர்ப்பதற்குள் மேலும் ஒரு விக்கெட்டை இழந்தது. கப்டன் ஹபிபுல்பஷார் 8 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் சகீர்கான் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார். அடுத்து காலித் மசூத் களமிங்கினார். இருவரும் சற்று நிதானமாக ஆடினார்கள். இதனால் அந்த அணி 16 ஆவது ஓவரில் 50 ஓட்டங்களைக் கடந்தது.

மசூத் 8 ஓட்டங்களை எடுத்திருந்தபோது ஆட்டமிழந்தார். 6 ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக இஸ்லாம் ராணா - அஷ்ரபுல்லுடன் இணைந்தார். இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். ஆனாலும், அணியின் ஓட்ட எண்ணிக்கை 106 ஆக இருந்த போது - அடுத்தடுத்து ராணாவும், முஷிபுர் ரஹ்மானும் ஆட்டமிழந்தனர். ராணா 24 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இதன்பின்னர் அஷ்ரபுல்லுடன் ஜோடி சேர்ந்த முகமட் ரபீக் நிதானமாக ஆடி அணியின் ஓட்டத்தை அதிகரிக்கக் காரணமாக இருந்தார். இதனால் ஓட்ட எண்ணிக்கை 171 ஆக உயரும்வரை விக்கெட் எதுவும் விழவில்லை. 69 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 47 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரபீக் கும்ளேயின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இதே ஓட்ட எண்ணிக்கையிலேயே வந்த வேகத்தில் பாஸ்யாவும், கும்ளேயின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார். இதையடுத்து மஷ்ரப் மொரடராஸ் களமிறங்கின்னார். மேலும் 7 ஓட்டங்களுக்குள் அவரும் ஆட்டமிழந்தார். பங்களாதேஷ் அணி 184



ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் பதான் - 5, சகீர்கான் - 2, கும்ளே - 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

## நியூஸிலாந்து - இலங்கை அணிகளின் போட்டி விபரம்

(ஒக்லாந்து)

இந்தமாத இறுதியில் நியூஸிலாந்துக்குச் செல்லவுள்ள இலங்கை கிரிக்கெட் அணி இரண்டு டெஸ்ட் மற்றும் 5 ஒருநாட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இந்தத் தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கை அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அணிக்கு அத்தப்பத்து தலைமை தாங்குவார். இதேவேளை போட்டிகள் நடைபெறவுள்ள திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையே முதலில் ஒருநாள் போட்டிகள் நடக்கவுள்ளன. முதலாவது ஒருநாட் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி ஒக்லாந்தில் நடைபெறவுள்ளது.

டிசம்பர் 29 ஆம் திகதி இரண்டாவது ஒருநாட் போட்டி, ஜனவரி 3 ஆம் திகதி 3 ஆவது ஒருநாட் போட்டி, ஜனவரி 4 ஆம் திகதி 4 ஆவது ஒருநாட் போட்டி, ஜனவரி 8 ஆம் திகதி 5 ஆவது ஒருநாட் போட்டி, ஜனவரி 15 - 19 ஆம் திகதிவரை முதல் டெஸ்ட்போட்டி, ஜனவரி 22 - 26 ஆம் திகதி வரை 2 ஆவது டெஸ்ட் போட்டி.

## சிட்டகொங் டெஸ்ட்டுக்கும் இந்திய அரசு அனுமதி!

(டாக்கா)

பங்களாதேஷ் அணியுடன் சிட்டகொங்கில் நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்த 2 ஆவது டெஸ்ட் போட்டிக்கும் இந்திய அரசு அனுமதியளித்துள்ளது.

தீவிரவாதிகளின் கொலை மிரட்டலையடுத்து மத்திய அரசு, ஆய்வுக்குழுவை அனுப்பி அந்த நாட்டில் பாதுகாப்புக் குறித்து ஆய்வுசெய்தது. இதையடுத்து திட்டமிட்ட அட்டவணைப்படி டாக்காவில் நடைபெறும் முதல் டெஸ்டுக்கு மட்டும் அனுமதியளித்திருந்தது.

சிட்டகொங்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்புக் குறித்து அங்கு சென்றுள்ள ஆய்வுக்குழு அளிக்கும் ஆலோசனையின் படியே 2 ஆவது டெஸ்ட் குறித்து அறிவிக்கப்படும் எனக் கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சிட்டகொங்கில் ஆய்வு



செய்த குழுவினர் பச்சைக்கொடி காட்டியதை அடுத்து 2 ஆவது போட்டியிலும் இந்திய அணி விளையாட, அரசு அனுமதியளித்துள்ளது. இதனால் 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் இந்தியா பங்கேற்பது உறுதியாகியுள்ளது.

# விளையாட்டு

## சப்பல் - ஹாட்லி தொடர் சமநிலையில் முடிவுற்றது



அவுஸ்ரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவந்த சப்பல்-ஹாட்லி ஒருநாள் போட்டித்தொடரின் இறுதியாட்டம் மழையால் நேற்றுக் கைவிடப்பட்டது.

இதனால் 1-1 என்ற அடிப்படையில் போட்டித் தொடரில் சமநிலை பெற்றிருந்த இரண்டு அணிகளும் வெற்றிக்கிண்ணத்தைப் பகிர்ந்து கொண்டன.

## அணித் தலைவர் பதவியே எதிர்கால இலட்சியம்!

### வீரேந்தர் ஷேவாக் தெரிவிப்பு

இந்தியக் கிரிக்கெட் அணியின் கப்டன் பதவியே தனது எதிர்கால இலட்சியம் என்று அதிரடித் துடுப்பாட்ட வீரர் வீரேந்தர் ஷேவாக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் பேட்டியளித்தார்.

கிரிக்கெட்டில் எனக்கு டெண்டுல்கர்தான் ரோல் மொடலாகத் திகழ்கிறார். போட்டியின் போது அவர் எனக்கு ஊக்கமளிப்பார். டெண்டுல்கர் தலைசிறந்த வீரர். அவர் ஆடும்போது அதை மிகவும் ரசிப்பேன். எனது துடுப்பாட்டம் அவரைப் போலவே அமைய வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளேன்.


தொடக்க வீரராகக் களம் இறங்குவதில் மகிழ்ச்சியாக இருக்கிறது. எனினும் மிடில் ஓடரில் ஆடத்தான் விருப்பமாக இருக்கிறது. இதில் இன்னும் அதிகப்படியான ஓட்டங்களைக் குவிக்கமுடியும். எதிர்காலத்தில் அணியின் கப்டனாவதே எனது இலட்சியம் அதுவும் ஒரு நாட் போட்டியின் கப்டனாக ஆடுவதென்பது மிகப்பெரிய சவாலுடன் ஆடக்கூடியது. இவ்வாறு ஷேவாக் கூறினார்.

# இரவு விடுதியில் தகராறு டைசன் பொலிஸாரால் கைது

குத்துச்சண்டை வீரர் மைக் டைசன் இரவு விடுதியொன்றில் தகராறு செய்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

மைக் டைசன் ஒரு வருடமாக எந்தப் போட்டிகளிலும் பங்குபற்றாமல உள்ளார். இந்த நிலையில் அவர் நேற்றுமுன்தினம் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலுள்ள அரிசோனா என்னும் இடத்திலுள்ள இரவு விடுதிக்குச் சென்றார். அங்குள்ளவர்களிடம் அவர் திடீரெனத் தகராறு செய்தார். பின்னர் அவர் விடுதியின் வெளியேவந்து அங்கு நின்ற ஒரு காரை அடித்து நொருக்கினார். இதில் அந்தக் கார் பலத்த சேதமடைந்தது.

இது தொடர்பாக காரின் உரிமையாளர் பொலிஸில் புகார் கொடுத்தார். உடனே ஸ்காட்டேல் நகர்ப் பொலிஸார் டைசனைக் கைதுசெய்தனர். இந்தப் பிரச்சினை தொடர்பாக இன்னும் இரண்டு வாரங்களில் விசாரணை தொடங்கும் எனத் தெரியவருகிறது.



டைசன் கடந்த 1992 ஆம் ஆண்டு இளம் பெண் ஒருவரைக் கற்பழித்த வழக்கில் 3 ஆண்டு சிறைத்தண்டனை பெற்றார். 97 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் ஹோலி பீல்டின் காதைக் கடித்துப் பரபரப்பு ஏற்படுத்தினார் என்பதும் குறப்பிடத்தக்கது.

# நியூஸிலாந்து வீரர் றிச்சட்சன் ஓய்வு!



நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான மார்க் றிச்சட்சன் - கிரிக்கெட் போட்டிகள் அனைத்திலிருந்தும் ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

33 வயதான ரிச்சட்சன் 2000 ஆம் ஆண்டிற் தான் போட்டிகளில் பங்கேற்கத் தொடங்கியபோதும் 38 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 2776 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இவரது சராசரி ஓட்டம் 44.77 ஆகும்.

அடுத்தவாரம் ஒக்லாந்தில் நடைபெறவுள்ள முதல்தர டெஸ்ட் போட்டியே இவரது இறுதிப் போட்டியாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவரது ஆகக்கூடுதலான ஓட்டங்கள் 145 ஆகும். 2003 ஒக்ரோபரில் இந்தியாவுக்கு எதிராக சண்டிகரில் இந்த ஓட்டங்களைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்ரேலிய ஓபனில் கிம்கிலிஸ்டர்ஸ் இல்லை



2005 ஆம் ஆண்டின் முதல் கிராண்ட் சிலாம் போட்டியான அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் அடுத்த மாதம் ஜனவரி 17 ஆம் திகதி மெல்போன் நகரில் ஆரம்பமாகவுள்ளது.

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் இந்தப் போட்டியில் பெல்ஜியம் நாட்டு வீராங்கனையான கிம்கிலிஸ்டர்ஸ் விளையாடமாட்டார் எனப் போட்டியாளர்கள் நேற்று அறிவித்தனர். கையில் ஏற்பட்ட காயம் காரணமாக சமீபகாலமாக நடைபெற்ற எந்த போட்டியிலும் அவர் பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மாவீரர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி!

மாவீரர் நாளை முன்னிட்டு யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையினரால் நடத்தப்பட்டு காலநிலைச் சீர்கேட்டினால் பிற்போடப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டம் இன்றும், இறுதியாட்டம் நாளையும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

அரையிறுதியாட்டத்தில் இன்று சென்.நிக்கிலஸ் அணியை எதிர்த்து யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இதில் ஏற்கனவே நடைபெற்ற சுற்றுப்போட்டியில் சென். அன்ரனிஸ் அணியினர் இறுதியாட்டத்துக்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)

# உண்மைக்கும் பொய்க்கும் இடையிலான வித்தியாசம்




இங்கே மடிக்கவும்



# துருவன்

## சிறுவர் அரங்கம்



### என் அன்புக்குரிய சிறுவர்களே!

நான் நன்றாகப் படிக்கிறேன். ஆனால் ஞாபகசக்தி குறைவாக இருக்கிறது. அதனால் படித்தவற்றை ஞாபகத்தில் வைத்திருக்க முடியவில்லை. என்ன செய்வது?

இதுதானே உங்கள் பிரச்சினை. படிக்கின்றீர்கள். ஆனால் ஞாபகத்தில் வைத்திருக்க முடியவில்லை. சரி இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். உங்களால் கடைசியாகப் பார்த்த தொலைக்காட்சி நிகழ்ச்சி, கிரிக்கெட் போட்டி... என்று எதையாவது ஒன்றை ஞாபகப்படுத்த முடிகின்றதல்லவா?

ஆம் சிறுவர்களே! உங்களுக்கு விருப்பமான விடயத்தின்மீது ஆர்வம் இருக்கும். அதனால் அவை மனதில் பதிந்துவிடும். ஆனால் விருப்பம் குறைவாக இருந்தால் அவை மனதில் பதிவதில்லை.

படித்த பாடங்கள் ஞாபகத்தில் நில்லாததற்குக் காரணம், உங்களின் ஞாபகசக்தி குறை வில்லை. விருப்பத்தில்தான் குறை இருக்கிறது.

எனவே இனிமேல் படிக்கும்போது விருப்பத்துடன் படியுங்கள். ஞாபகத்தில் இருக்கும்.

- பாசமுடன் சாரு அக்கா



### துயர் துடைப்போம்

சூரியன் உலகில் எதற்காக?
சுத்த மற்றதைச் சுடுவதற்காய்
சந்திரன் வானில் எதற்காக?
சுட்டதைக் குளிரச் செய்வதற்காக
மழையே வந்தது எதற்காக?
மண்ணைக் கழுவிச் செல்வதற்காய்
காற்றே சுழன்றது எதற்காக?
காய்ந்த சருகை உதிர்ப்பதற்காய்
கடலே சூழ்ந்தது எதற்காக?
உலகின் கழிவைக் கரைப்பதற்காய்
மனிதப் பிறவி எதற்காக?
அடுத்தவர் துயரைத் துடைப்பதற்கே

மா.கிருபாளினி
தரம் 11
மெதடிஸ்த பெண்கள் பாடசாலை பருத்தித்துறை.

# MY TEACHER

My class teacher's name is miss.Gowry.
She teaches us all the subjects.
She teaches English too.
She is very kind and halpful to us.
She never punishes us.
We all love her Very much.

S.Lourds Vithusa
Grade 8.

## நாடுகளும் தலைநகரங்களும்

| | |
|---|---|
| இலங்கை | ஸ்ரீ ஜெயவர்த்னபுர |
| இந்தியா | புதுடில்லி |
| இத்தாலி | ரோம் |
| இந்தோனேசியா | ஜகார்த்தா |
| இஸ்ரேல் | டெல்அவிவ் |
| கனடா | ஒட்டாவா |
| நோர்வே | ஒஸ்லோ |
| டென்மார்க் | கொபன்ஹேகன் |
| ஜேர்மனி | பேர்லின் |

ம.சிவகௌரி
தரம் - 6
பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை

# நாம் வாழும் உலகம்

விஞ்ஞானிகள் தொலைநோக்கிகளின் உதவியால் நெப்ரியூன், புளூட்டோ என்ற புதிய கிரகங்களையும் சந்திரனின் மேற் பரப்பில் உள்ள மலைகளையும் பெரிய குழிகளையும் கண்டனர். வியாழன், செவ்வாய் ஆகிய கிரகங்களின் உபக்கிர கங்களையும் பார்த்தனர்.

எல்லாவற்றுக்கும் மேலாகப் பல்வேறு திசைகளிலும் உள்ள உடுத்தொகுதிகளையும் கண்டு பிடித்தனர். தொலைநோக்கியை கண்டு பிடித்தனர். தொலைநோக்கியை கண்டு பிடித்தமை விண்ணியலிலே ஒரு பெரிய திருப்பத்தை உண்டாக்கியது. அதனால் இத்துறை மிகவும் துரிதமாக முன்னேறியது. எனினும் தொலைநோக்கி களின் சக்திக்கும் ஓர் எல்லையுண்டாதலால் விஞ்ஞானிகளால் ஓரளவுக்கு மேல் தங்களுடைய ஆய்வுகளில் ஈடுபட முடிய வில்லை.

## உங்கள் கைவண்ணம்



ப.கஜேந்தினி
தரம் - 9
குப்பிளான் விக்னேஸ்வரா
மகா வித்தியாலயம்

# எது சிறந்தது?

ஒரு சிறுமிக்கு கேள்விகள் கேட்க மிகவும் பிடிக்கும்.



மாம்பழமா அல்லது அன்னாசிப் பழமா, ரோஜாவா அல்லதுமல்லிகைப்பூவா, தண்ணீரா அல்லது சோடாவா, பந்தா அல்லதுபொம்மையா எது சிறந்தது என்று அவள் தனது அம்மாவைக் கேட்டாள்.

அம்மா பொறுமையாகப் பதில் சொன்னாலும் தன்னுள்ளே ஆச்சரியப் பட்டாள்.

உண்மையில் பந்தா அல்லது பொம்மையா, ரோஜாவா அல்லது மல்லிகைப்பூவா எது சிறந்தது என்று எப்படிச் சொல்வது? ஒருமுறை அந்தச் சிறுமி கேட்டாள். அம்மா கதை, பாட்டு இரண்டில் எது சிறந்தது?

சூரியன் அல்லது வானம் இரண்டில் எது சிறந்தது என்று நீ யோசித்து பதில் சொல். அப்ப நான் கதை, பாட்டு இரண்டில் எது சிறந்தது என்று சொல்கிறேன் என்றாள்.

சிறுமி வெகுநேரம் யோசித்தும் ஒன்றும் தோன்றவில்லை. அவள் வானத்தையும் பிரகாசமான சூரியனையும் பார்த்தாள். சூரியன் சிறந்ததா அல்லது வானம் சிறந்ததா என்று சொல்ல முடியவில்லை. அவை அற்புதமானவையாக, பிரிக்க இயலாதவையாக இருந்தன.

அதன்பின் அச்சிறுமி, எது சிறந்தது என்று கேட்பதை நிறுத்தி விட்டாள். அவள் வேறு விதமாகக் கேட்க ஆரம்பித்தாள். கதை எப்படி சிறந்த கதை? பாட்டு எப்படி நல்ல பாட்டு? அம்மா சந்தோஷமாக அவளுக்குப் பதில் சொன்னாள்.

இங்கே மடிக்கவும்

# இன்ஸ்பெக்டர் இளையதம்பி துப்பறியும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)



அமைதியாயிருந்த நாதன், இளையதம்பியைப் பார்த்து 'இன்ஸ்பெக்டர்! வீட்டுக்குப் போக நேரமாகிறது முத்துவேலு ஐயாவிடம் சொல்லிவிட்டு நான் போகலாமா' என்று கேட்டான். 'இல்லை நாதன் நான் விசாரணையை முடிக்கும் வரை எவரும் இங்கிருந்து போகக் கூடாது. தயவு செய்து நீ சிறிது பொறுத்துக் கொள்ளவேண்டும்' என்று நாதனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே சொன்னார் இளைய தம்பி.

இளையதம்பி சொன்னதைக் கேட்ட நாதன் தலையைச் சொறிந்தான். என்ன கரைச்சலடா இது பாழாய்ப் போன அந்தப் பச்சை வைரம் இன்றைக்குப் பார்த்துத்தான் தொலையவேண்டுமா என முணுமுணுத்தான். அவனது முணுமுணுப்பைக் கவனிக்க இளைய தம்பியின் கூரிய காதுகள் தவறவில்லை. என்ன நாதன் உனக்குள்ளாக ஏதோ பேசிக் கொள்கிறாயே. என்மேல் கோபமா? என்று கேட்டுக்கொண்டே நாதனைப் பார்த்துக் குளிர்மையாகச் சிரித்த இளையதம்பி. நாதன் அப்படி என்னப்பா அவசரம். வீட்டில் ஏதாவது விசேஷமா என்ன? என்று கேட்டார்.

இல்லை இன்ஸ்பெக்டர் ஐயா நேற்றிலிருந்து எனக்குக் கடுமையான பல்வலி. ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும். நேரமானால் போகமுடியாதே. அதுதான் எனது அவசரத்துக்குக் காரணம் என்று சொல்லிக் கன்னத்தைப் பிடித்துக் கொண்டான் நாதன். ஓ அப்படியா விஷயம் அது தான் வாயைத் திறந்து சரியாகப் பேசாது நீ முணுமுணுப்பதற்குக் காரணமா? என்று நாதனைப் பார்த்துக் கேட்டுவிட்டு நக்கலாகச் சிரித்தார் இளைய தம்பி.



## குட்டிச் சிறுவன்

இளையதம்பி நாதனுடன் பேசிக் கொண்டிருந்தவேளையில் நகை வாங்கக் கடைக்கு வந்திருந்த பெண்மணியின் குட்டிமகன் கடை வாசலுக்கு வந்து நின்று வெளியே வீதியில் செல்லும் வாகனங்களை வேடிக்கை பார்க்கத் தொடங்கினான். குட்டிச் சிறுவன் தனது கையில் பெரியதொரு கொய்யாப்பழத்தையும் சட்டைப்பை நிறைய மிட்டாய்களையும் வைத்திருந்தான்.

நாதனுடன் பேசுவதை நிறுத்திவிட்டு வாசலில் நின்றிருந்த குட்டிச் சிறுவனையே பார்த்துக் கொண்டிருந்தார் இளையதம்பி. சட்டைப் பையிலிருந்த மிட்டாய்களில் ஒன்றை எடுத்துச் சாப்பிட்டு முடித்தவன் இப்போது பாதிப் பழமும் பாதிக் காயுமாயிருந்த கொய்யாப்பழத்தைக் கஷ்டப்பட்டுக் கடிக்க முயற்சி செய்து கொண்டிருந்தான்.


## முத்துவேலு என்னுடன் வாரும்.

சிறிது நேரம் இந்தச் சிறுவனைப் பார்த்துக்கொள்ளு வீதிக்கு எங்காவது ஓடிவிடப் போகிறான். இதோ நான் வருகிறேன் என்று நாதனிடம் சொல்லிவிட்டுக் கடைக்குள்ளே போனார் இளைய தம்பி. கடையினுள்ளே நகைகளைப் பார்த்துத் தெரிவுசெய்து கொண்டிருந்த குட்டிச் சிறுவனின் தாயார் இவ்வளவு நேரமும் தன்னருகே நின்றிருந்த மகனைக் காணாது திகைத்தார்.

விரைந்து எழுந்து மகனைத் தேடி வெளியே செல்ல முயன்றார். அவரைத் தடுத்து நிறுத்திய இளையதம்பி கவலைப் படாதீர்கள் அம்மா வாசலில் நின்று வேடிக்கை பார்த்திடும் உங்கள் மகனைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுமாறு கடைக்காரப் பையனிடம் சொல் லிவிருக்கிறேன் என்று கனிவுடன் சொன்னார்.

# தொலைந்த வைரம்

பின்னர் முத்துவேலுவைப் பார்த்து மிஸ்டர் முத்துவேலு ஒரு நிமிடம் என்னுடன் வருகிறீர்களா மிகவும் அவசரம் என்று சொல்லி அழைத்தார்.



இதோ வருகிறேன் இளைய தம்பி என்று சொல்லிய முத்துவேலு வியாபாரத்தைக் கவனிக்குமாறு அருகிலே இருந்த வேலையாளிடம் சொல்லிவிட்டு எழுந்தார். தன்னருகே வந்த முத்துவேலுவின் காதில் இளையதம்பி இரகசியமாக எதையோ சொன்னார். அதைத்தொடர்ந்து நகைக் கடையின் பின்பக்க வாசல் வழியாக இளையதம்பியும் முத்துவேலும் நகைப் பட்டறைக்குள் சென்றார்கள். சில நிமிடங்கள் கழித்துப் பட்டறைக்குள்ளிருந்து வேகமாகத் திரும்பி வந்த முத்துவேலு மேசை லாச்சியைத் திறந்து அதிலிருந்தவைரப் பெட்டியையும் கணக்குப் புத்தகம் ஒன்றையும் எடுத்துக் கொண்டு மீண்டும் பட்டறைக்குள் சென்றார்.

(தொடரும்)

## விடுகதைகளும் விடைகளும்

1. பார்த்தால் ஐந்து கால், எண்ணினால் நான்கு கால்
- அது என்ன?

2. எத்தனை தரம் திறந்து திறந்து மூடினாலும், சத்தமே வராத கதவு
- அது என்ன?

3. மின்னல் வேகத்தில் மின்னியதைப் பிடித்து வைப்பான்
- அவன் யார்?

4. உணரத் தெரிந்தவனைக் கண்ணால் காணமுடியாது
- அவன் யார்?


5. கையில் அடங்கும் பிள்ளை, கதை நூறு சொல்லும் பிள்ளை
- அது என்ன?

6. ஒற்றைக்கால் மனிதனுக்கு எட்டுக் கை
- அவன் யார்?

### விடைகள்

1. யானை
2. கண் இமை
3. புகைப்படக் கருவி
4. காற்று
5. புத்தகம்
6. குடை

1. படத்தில் 5 மீன்கள் உள்ளன. இவற்றுள் ஒரேயொரு மீன் மட்டும், மற்றைய மீன்களிலிருந்து வேறுபட்டது. அந்த மீன் எது?




## மூளைக்கு வேலை

1. உங்களிடம் மூன்று தலைவாழை இலைகள் உள்ளன. 15 பேர் மதிய உணவு உண்ண இலை வெட்டவேண்டும். கத்தியை மூன்று முறை மட்டுமே பயன்படுத்தி மூன்று இலைகளையும் 15 பேருக்கும் 15 துண்டுகளாக வெட்ட உங்களால் முடியுமா?

2. திங்கட்கிழமை வேலைக்குப் போன முத்துவுக்கு கூலி மிகவும் குறைவாகவே கிடைத்தது. மறுநாள் செவ்வாய்க் கிழமை - திங்கட்கிழமை கிடைத்த கூலியைவிட, 6 ரூபா அதிகமாகக் கிடைத்தது. புதன்கிழமை செவ்வாய்க்கிழமை கிடைத்த கூலியைவிட, 6 ரூபாவும், வியாழக்கிழமை - புதன் கிழமையை விட 6 ரூபாவும், வெள்ளிக்கிழமை வியாழக்கிழமை கிடைத்த கூலியைவிட 6 ரூபாவும் அதிகமாகக் கிடைத்தது. சனிக்கிழமை முத்து வேலைக்குப் போகவில்லை. திங்கட் கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை முத்து தனக்குக் கிடைத்த கூலியை எண்ணிப் பார்த்தான். மொத்தம் 100 ரூபா இருந்தது. அப்படியாயின் ஒவ்வொரு நாளும் பெற்ற கூலி எவ்வளவு?

### மூளைக்கு வேலை சென்றவார விடைகள்

7 பெண்கள், 29 ரூபா

ரூபா 203 மீதி வராமல் வகுக்கும் இரண்டு இலக்க எண் எது என்று கண்டுபிடிக்க வேண்டும். ஏனெனில் எந்தப் பொருளும் 10 ரூபாய்க்கு குறைய இல்லை என்பதால்


$7 \times 29 = 203$

### பிஞ்சுக்குரிய பெயர் எது சரியாகக் கோடிடுங்கள்

| | |
|---|---|
| பனை | குரும்பை |
| வாழை | மூசு |
| தென்னை | வடு |
| பலா | கச்சல் |
| மா | நுங்கு |


❖❖❖❖

2. 1 ஆவது புள்ளிக்கும் 2 ஆவது புள்ளிக்கும் இடையேயுள்ள தூரம், 2 ஆவது புள்ளிக்கும் 3 ஆவது புள்ளிக்கும் இடையேயுள்ள தூரத்தைவிட அதிகமானதா?, குறைவானதா?





இங்கே மடிக்கவும்






வர்ணம் தீட்டுங்கள்



குட்டித் தாரா தனது நண்பித் தாராவைச் சென்றடைய வழிகாட்டுங்கள்

## வலையில் சிக்கிய சின்ன மீன்



மீனவன் ஒருவன் ஏரியில் வலை வீசினான். அவன் வலையில் சிறு மீன் ஒன்று சிக்கியது.

வலையை விரித்து அந்த மீனை எடுத்தான் மீனவன்.

அந்த மீன் அவனைப் பார்த்து, மீனவனே! நான் சின்னஞ்சிறு மீனாக இருக்கிறேன். என்னால் உனக்குப் பெரிய அளவில் பயன் இல்லை. என்னை மீண்டும் ஏரியில் விட்டுவிடு. நான் சில நாட்களில் வளர்ந்து பெரிய மீன் ஆவேன். அப்பொழுது என்னைப் பிடித்தால் உனக்கு நிறையப் பயன் கிடைக்கும் என்று இனிமையாகப் பேசியது.

'இன்று நீ என் கையில் கிடைத்திருக்கிறாய். நீ பெரிய மீனான பிறகு மீண்டும் என் கையில் கிடைப்பாய் என்பது என்ன உறுதி? கையில் கிடைத்ததை இழக்கும் முட்டாள் என்றா என்னை நினைத்துக்கொண்டாய் என்று சொல்லியபடி தன் கூடைக்குள் அந்த மீனைப் போட்டான் மீனவன்.




# சிறுத்தைப் புலி

இரவிலும் பகலிலும் சிறுத்தைப்புலி இரை தேடிக் கிளம்பும். ஆடு, மான், முயல், முள்ளம் பன்றி சிறிய விலங்குகள் பறவைகள் ஊர்வன என எது கிடைத்தாலும் உண்ணும்.

மரத்தின் மேலிருந்தோ பாறைகளின் மேலிருந்தோ இரையைக் கவனித்து வேட்டையாடும். சிறுத்தைப்புலி நன்றாக மரம் ஏறும். ஓய்வு நேரங்களில் பெரும்பாலும் மரங்களில் அமர்ந்து பொழுதைக் கழிக்கும்.

மனிதர்களைவிட 5 மடங்கு கூடியதாக மிகவும் நுட்பமான சத்தத்தையும் சிறுத்தைப் புலிகளால் கேட்க முடியும். மணிக்கு 5 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடக்கூடியவை. 3 மீற்றர் உயரத்துக்கு தாவிக் குதிக்கக் கூடியவை.

பூனைக் குடும்பத்தில் மிகப் பெரிய பிராணி சிறுத்தைப்புலி. இது மாமிசம் உண்ணக்கூடிய பாலூட்டி. இதன் உடல் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில் கறுப்பு வண்ணப் புள்ளி களுடன் காணப் படும்.





இவற்றின் தோலின் நிறத் தால் சமவெளி கள், பாறைகள், காடுகளில் எளி தில் கண்களுக் குப் புலப்படாது.

சிறுத்தைப்புலி 3 முதல் 6 அடி நீளம் வரை இருக் கும். குட்டிச்சிறுத்தைப்புலி ஒரு பொம்மையைப் போன்று அழகாக இருக்கும். எலி, அணில், முயல் போன்ற சிறு விலங்குகளை வேட்டையாடக் கற்றுக் கொடுக்கவும். சிலநேரங்களில் ஒன்றை ஒன்று துரத்தி விளையாடவும் சொல்லிக் கொடுக் கும் தாய்ப்புலி.

இவற்றில் நிறைய வகை உண்டு. பாலைவனத்தில் வாழும் சிறுத்தைகள் வெளிர் மஞ்சள் நிறத்திலும், காடுகளில் வசிப்பவை ஆழ்ந்த மஞ்சள் நிறத்திலும், உயரமான மலைப்பிரதேசத்தில் வாழ் பவை மண்நிறத்திலும் காணப்படுகின்றன. கறுப்பு நிறச் சிறுத்தைகளும் உண்டு.


இவற்றின் சராசரி ஆயுட்காலம் 12 முதல் 15 ஆண்டுகள் ஆகும்.

இங்கே மடிக்கவும்



# அண்ணனும் தங்கையும்

## மழைத்துளி ஒரு குறிப்பிட்ட உயரம் வந்த பின்னரே தெரிவதேன்?



பக்கத்து வீட்டுக்கு அம்மாவுடன் சென்றாள் குழலி. அவர்களுடைய வீடு நாற்சார் வீடு. அதற்குள் அமர்ந்து விளையாட குழலிக்குப் பிடிக்கும். அங்கு சென்ற சிறிது நேரத்தில் மழைபெய்ய ஆரம்பித்தது வீட்டுக் குள். மழை பெய்வதை வேடிக்கை பார்த்தாள் குழலி.

இந்தப் பக்கத்தில் இருந்து அந்தப் பக்கத்துக்கு ஓடினாள். கம்பி இடுக்கு கள் வழியே வானத்தை அண்ணாந்து பார்த்தாள். மழைத் துளி மேலிருந்து விழுவது கண்க ளுக்குத் தெரியவில்லை. வீடு திரும்பியவள் அண்ணாவிடம் போனாள்.

குழலி :– அண்ணா நான் கண்ணாடி போடவேண்டும்.

சங்கர் :– ஏன் குழலி? கண்ணில உனக்கென்ன பிரச்சினை?

குழலி :– மழைபெய்யும்போது வானத்தைப் பார்த்தேன். ஆனால் மழைத்துளி மேலிருந்து விழுவது கண்களுக்குத் தெரியவில்லை அதுதான்.

(சங்கர் அண்ணா பலமாகச் சிரித்தார்)

குழலி :– ஏன் அண்ணா சிரிக்கிறீர்கள்?

சங்கர் :– குழலி, மழைத்துளிகள் எங்களுடைய கண்களுக்குத் தெரிய வேண்டுமானால், அதன்மீது பட்டுச் சிதறுவதற்கு போதுமான வெளிச்சம் தேவை. இரவில், அதுவும் இருட்டில் விழும் துளிகளைப் பார்க்கமுடியாது.

குழலி :– அண்ணா! அதனால்தான் இரவில் தெருவிளக்கின் வெளிச்சத்தில் அதனருகில் விழும் மழைத்துளிகளைப் பார்க்கமுடிகிறதா?

சங்கர் :– ஓம் குழலி. பகற்பொழுதில் வானில் வெளிச்சம் கூடுதலாக இருக்கும். மரம், கட்டடம் ஆகியவற்றின் நிழற்பகுதிகளில் வெளிச்சம் குறைவாக இருக்கும். பகலில் மழை பெய்யும் போது மழைத்துளிகள் சிதறடிக்கும் ஒளியைவிட வானத்து ஒளி பலமடங்கு அதிகமாகும். இதனால் அண்ணாந்து பார்க்கும் உயரத்தில் விழும் மழைத்துளிகளை நாம் காண முடிவதில்லை. அருகில் விழும் மழைத்துளிகளை மட்டுமே காணமுடிகிறது.

குழலி :– மழைத்துளிகள் கண்களுக்குத் தெரியவேண்டுமானால் போதுமான வெளிச்சம் தேவை. அப்படித்தானே அண்ணா?

சங்கர் :– அப்படித்தான் குழலி. அப்ப எப்ப கண் டாக்டரிடம் போவம் கண்ணாடி போட.

(குழலி சிரிக்கவாறு ஓடிப்போனாள்)

# முல்லா அடித்த மாடு



பக்கத்துத் தெருவில் இருக்கும் ஒரு வருடையமாடு முல்லாவின் வீட்டிற்குள் நுழைந்து விட்டது. மாடு தன் வீட்டு வேலியை அழித்துத் தோட்டத்துக்குள் புகுந்து செடி, கொடிகளைச் சாப்பிடுவதை முல்லா கண்டார். ஒரு தடியை எடுத்துக் கொண்டு அந்த மாட்டை அடிப்பதற்காக விரைந்தார்.

முல்லாவைக் கண்ட மாடு வெளியே ஓடி தன்னுடைய சொந்தக்காரன் வீட்டை அடைந்தது. முல்லாவும் விடாமல் அதன் பின்னால் ஓடி அதை எட்டிப்பிடித்து தம்மிடமிருந்த தடியால் அந்த மாட்டின் முதுகில் ஆத்திரம் தீரும் வரை அடித்தார்.

இதைக் கண்ட அந்த மாட்டுக்குச் சொந்தக்காரர் முல்லா எதற்காக என் மாட்டை அடிக்கின்றீர்கள்? எனக் கேட்டார். அதைக் கேட்ட முல்லா அவரைப் பார்த்து எதற்காக நான் மாட்டை அடிக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியா விட்டாலும் பரவாயில்லை. அந்த மாட்டுக்கு நன்றாகத் தெரியும் என்றார்.

# விளையாட்டு

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுகிறது. ஒலிம்பிக்கின் இறுதி நாளன்று அடுத்த ஒலிம்பிக் எங்கு, எந்த நாட்டில் நடைபெறும் என்பது அறிவிக் கப்படும். அந்தத் தினத்திலிருந்தே அதற்கான பணிகள் அந்த நாட்டில் அந்த இடத்தில் தொடங்கப்பட்டு விடும். இதனை ஒழுங்குபடுத்தி செயற்படுத்துவது சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி. இதன் தலைமையகமானது சுவிற்சர்லாந்து நாட்டில் உள்ளது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி*
*இன்னாசெய் யாமை தலை.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அரச – இராணுவ அச்சுறுத்தல்களும்..; அதற்கிடையே தடுமாறும் சமாதானமும்!

சமாதான முயற்சிகளின் எதிர்காலம் பாரதூரமான சந்தேகங்களுக்கும், கேள்விக்குமுள்ளாகிவரும் சமகால நெருக்கடி நிலைமையை மேலும் சிக்கலாக்கும் உள்நோக்கத்துடன் கூடிய செயற்பாடுகளில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் அதிகார வலுமிக்க பிரமுகர்களும், படைத்தரப்பினைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகளும் தீவிரமாக ஈடுபட்டு வருவதைப் பார்த்தால் அரசாங்கமும் – படைத்தரப்பும் மறுபடியும் போர் ஒன்றை தீவிரமாக முனைந்து முன்னெடுக்கும் இலக்குடன் இயங்கத் தொடங்கியுள்ளமையைத் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும்.

சமாதானத்திற்காக ஆர்வலயிப்புடன் ஓய்வின்றி நம்பிக்கையைத் தளரவிடாது, பறந்து பறந்து பல்வேறு நெருக்கடிகள், நிராகரிப்புகள், அவமதிப்புகளுக்கு மத்தியிலும் செயற்பட்டுவரும் நோர்வே அனுசரணையாளர்கள் தொடர்பாக – அவர்களின் பங்களிப்புத் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக்கிடையே கடும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு அரசாங்கத்துள் உள்ளக விரிசல் அதிகமாகி வரும் நிலையில், அரசால் சமாதான முயற்சிகளை நேர்மையாகவும், விசுவாசமாகவும் தொடரமுடியாத தன்மையே தொடர்ந்து வருகின்றமையால்- "போர்நிறுத்த உடன்பாட்டின்" இறுக்கம் தளர்ந்து அது செயலிழக்கும் அபாயம் தோன்றியுள்ளமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் நீதி மற்றும் இனவிவகாரங்களுக்கான அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எச்சரித்துள்ளமையையும் கவனத்திற் கொள்வது அவசியமாகும்.

நோர்வே நாட்டின் சமாதான அனுசரணையாளர்களின் பணியைச் சந்தேகிக்கும் ஜே.வி.பியினர் – அவர்கள் விடுதலைப் புலிகளுக்குச் சார்பாகச் செயற்படுகின்றனர் என்று குற்றம் சாட்டுவதும், யுத்தநிறுத்த உடன்படிக்கை சட்டரீதியான ஒன்றல்ல என்றும், அதனை ரத்து செய்யக்கோரி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளதும், அரசின் இரட்டை அணுகுமுறையை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

ஜே.வி.பி – ஆளும் அரசின் முக்கிய பங்காளி என்ற வகையில் சமாதான முயற்சிகள் தொடர்பான அதன் நிலைப்பாடும், கருத்துவெளிப்பாடும், ஏனையநடவடிக்கைகளும், அரசின் நிலைப்பாடாகவே கருதவேண்டியுள்ளது தவிர்க்க முடியாத ஒன்றேயாகும். இதனை ஜனாதிபதி தரப்பில் கதிர்காமர் போன்றோர் மறுத்தாலும், அதற்காக ஜே.வி.பியினரை கண்டித்து வெளிப்படையாக அவர்களின் நடவடிக்கைகளை அரசாங்கத்தின் ஒருமைப்பாட்டை மீறி சுயாதீனமாகச் செயற்படுவதற்கு கண்டன எச்சரிக்கையை வெளியிட்டு இனிமேலும், அத்தகைய சமாதான எதிர்ப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளாதவாறு தடுக்காத வகையில் அவர்களின் கருத்துக்களை ஏற்கமுடியாது.

போர்நிறுத்தம் சட்டரீதியற்றது, அதனை ரத்துச் செய்யவேண்டும் என வழக்கொன்றைத் தாக்கல் செய்யுமுன் அரசின் ஏனைய பங்காளிகளுடன் – குறிப்பாக ஜனாதிபதியுடன் ஆலோசிக்காது அதனைச் செய்தார்கள் என எவரும் நம்புவது கடினமே...!

அப்படியானால், அதற்கு அதிகாரபீடத்தவரின் இரகசிய மௌன அங்கீகாரம் இருக்கிறது என்று தானே அர்த்தம்!

ஒருபுறம் யுத்த நிறுத்தத்தின் நலன்களை – நன்மைகளை மக்கள் அனுபவிக்கிறார்கள் என்று கதிர்காமர் அறிக்கை விடுக்கிறார். ஆனால், மறுபுறம் ஜே.வி.பியினர் யுத்தநிறுத்தத்தை இரத்துச் செய்யக்கோரி வழக்குத்தாக்கல் செய்கின்றனர். இது அரசின் உள்கை முரண்நிலையைக் காட்டுகிறதா? அல்லது இரட்டை அணுகுமுறையைக் குறிக்கின்றதா?

போர் நிறுத்த உடன்பாட்டை இரத்துச்செய் என்றால் போரை மீண்டும் தொடங்கத் தயார் என்றுதானே கருத்து.

இதற்கு ஜனாதிபதியின் ஒப்புதல் இல்லையெனில், அரசின் ஆதரவு இல்லையெனில் நேரடியாக ஜே.வி.வியை அந்த வழக்கை வாபஸ் பெறுமாறு அரசோ – ஜனாதிபதியோ ஆணை பிறப்பிக்கவேண்டியது தானே...?

ஆனால், அரசோ – ஜனாதிபதியோ அதைச் செய்யமாட்டார்கள்.


இதேவேளை, முப்படைகளின் தளபதியும், கடற்படைத் தளதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி எந்தவிதமான இராணுவரீதியிலான சவாலை எதிர்கொள்ளவும் கடற்படை தயாராகவுள்ளதாகவும், படையினரின் போரிடும் ஆற்றல் பேராற்றலாக விஸ்தரிக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளமையானது, சமாதானச் சூழல் இன்னும் நிலவும் நிலையில் போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டுவரும் சூழலில், அதற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட ஒன்றேயாகும்.

ஒரு நாடு தனது இராணுவப் பலத்தை விஸ்தரிப்பது வேறு, அதனைப் பகிரங்கமாக்கி மிரட்டமுனைவது வேறு. பின்னர் போர்ப்பிரகடணம் ஒன்றுக்கு இராணுவம் தயாராகவுள்ளது என்ற அச்சுறுத்தல் தொனியை உள்ளடக்கியதென்றே கூறவேண்டும்.

எல்லாவகையிலும் அரசினதும் – படைத்தரப்பினதும் அண்மைக்கால நகர்வுகள் அனைத்தும் மீண்டும் ஒரு யுத்தத்துக்கு அவர்கள் தம்மைத் தயார் படுத்துவதையே உணர்த்துவதாகவுள்ளது.

சமாதானத்துக்கு இன்றைய ஜதார்த்த நிலையை இந்த அடிப்படையில் இருந்து மதிப்பீடு செய்வதே அவசியமானதாகும்.

# நாடும் நடப்பும்




# வீதி விபத்துக்களை தடுக்க உதவும் முதல் தமிழ் நூல்!

## அறிமுகவிழாவில் பத்மநாதன்

(யாழ்ப்பாணம்)

ஓய்வுபெற்ற போக்குவரத்து பிரதிப் பொலிஸ்மா அதிபர் த.பேரின்பநாயகம் எழுதிய சாரத்திய சவால்களும், சாமர்த்தியங்களும் என்னும் நூல், யாழ்.குடாநாட்டு மக்கள் படித்து அதன்படி ஒழுகுவதன் மூலம் யாழ்.குடாநாட் டில் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களை முற்றாகத் தவிர்க்கலாம் என யாழ். மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்தார்.

சாரதிய சாவால்களும், சாமர்த்தியமும் நூல் - பத்திரிகையாளர்களுக்கான அறிமுக நிகழ்வு யாழ்.செயலகத்தில் நேற்று மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில் தமிழர்களுக்கு தமிழர் ஒருவரினால் சிறந்த மொழிநடையில் வீதிப் போக்குவரத்து தொடர்பான நூல் முதல் முதல் கிடைத்துள்ளது.

இந்த நூல் சிறந்த நூல். போக்குவரத்துத்துறையில் 30 வருடங்களுக்கு மேலாக அவரது அனுபவத்தையே நூலாகத் தயாரித்துள்ளார்.

வாகனச்சாரதிகள், பாதசாரிகள் என்பவர்களுக்கு மிகவும் முக்கியமான ஒரு நூல். தற்போது, யாழ்.குடாநாட்டில் மோட்டார் சைக்கிள் விற்பனை செய்யும் முகவர்கள் கொள்வனவுசெய்து இவற்றை விற்பனை செய்யமுடியும். இந்த நூலில் ஆசிரியர் இலங்கை விபத்துத் தடுப்புச் சங்க வீதிப் பாதுகாப்புக்கான தேசியபேரவை முன்னாள் தலைவராக இருந்துள்ளார் எனத் தெரிவித்தார்.

# பிரதேச செயலர் பிரிவுரீதியாக பனம் விதைகள் நடுகை

(யாழ்ப்பாணம்)

கடந்தகால யுத்த நடவடிக்கைகள் காரணமாக யாழ். குடாநாட்டில் பல ஆயிரக்கணக்கான பனை மரங்கள் அழிக்கப்பட்டன. இதைக் கருத்திற்கொண்டும், அருகிவரும் பனைவளத்தை மீளவும் உருவாக்கும் நோக்கிலும், பனை அபிவிருத்திச்சபை பல ஆயிரக்கணக்கில் பனம் விதைகளை நடுகைசெய்துள்ளது.

சுற்றாடல் வனவள பாதுகாப்பு அமைச்சின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நடுகைத் திட்டத்தின்படி, யாழ்.குடாநாட்டில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் 1560 என்ற ரீதியில் இதுவரை 60 ஆயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பனைமரங்களின் பங்கு முக்கியமானதாகும். இவற்றிலிருந்து உச்சப்பயனைப் பெறமுடியும். இதையும் கருத்திற்கொண்டே இந்த நடுகைத் திட்டத்தில் ஈடுபடுவதாகவும் பனை அபிவிருத்திச் சபையினர் தெரிவித்தனர்.

## திருக்குறள் மனனப் போட்டியில்

# வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டியில், வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்புவிழாவும், சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் வேம்படி மகளிர் உயர்தர பெண்கள் பாடசாலை பிரதான மண்டபத்தில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த விழாவை இந்திரன் காராளசிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து ப.விக்னேஸ்வரன், றெஜினா இருதயநாதன், பார்வதி மகாசிவம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்தனர்.

தொடர்ந்து சிறப்பு விருந்தினர் பார்வதி மகாசிவம் விருந்தினர் காராளசிங்கம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

பிரதம விருந்தினர் திருக்குறள் மனனப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில் வழங்கி கௌரவித்தார். அதனைத் தொடர்ந்து சாதனையாளர் விருது வழங்கல் நிகழ்வில் றெஜினா இருதயநாதன், தமிழ் கல்விக் கழக உறுப்பினர் அகிலன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

சாதனையாளர்களுக்கான விருதைப் பிரதம விருந்தினர் வழங்கி கௌரவித்தார். சாதனையாளர் ஒவ்வொருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா பணப்பரிசு வழங்கப்பட்டது.

அத்துடன், திருக்குறள் மனனப் போட்டியில் சாதனை படைத்த மாணவிகள் இருவருக்கும் பணப்பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வலயக் கல்வி பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் என பலரும் கலந்துகொண்டனர். (வ)

# பெண்களுக்கு எதிரான வன்செயல்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பெண்கள் பணியகத்தின் அனுசரணையுடன் பெண்களுக்கெதிரான வன்செயல்களைத் தடுத்தல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று, எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வாக காலை 9.30 மணிதொடக்கம் 10.45 மணிவரை சமூகமயப்படுத்தப்பட்ட பால்நிலையம் ஆணுக்கும், பெண்ணுக் குமிடையில் தொழில் பகுப்பின் அடிப்படையில் சமூகத்தில் காணப்படும் வித்தியாசத்தை அறிந்துகொள்ளல் எனும் தலைப்பில் யு.என்.எச்.சி.ஆர் அமைப்பைச் சேர்ந்த சமூகசேவை உதவியாளர் செறின் மில்ரன் கருத்துரை வழங்கவுள்ளார்.


தொடர்ந்து "பெண்களுக்கெதிராக நடைபெறும் துன்புறுத்தல்கள் அவை நடைபெறும் இடங்களும், சந்தர்ப்பங்களும், அதனால் ஏற்படும் எதிர்விளைவுகளும்" எனும் தலைப்பில் முன்னாள் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் பத்தினியம்மா உரையாற்றவுள்ளார்.

மதியபோசன இடைவேளையைத் தொடர்ந்து, பிற்பகல் 1 மணி தொடக்கம் 2.30 மணிவரை "பெண்களுக்கெதிரான துன்புறுத்தல்களை இனங்காணலும், அதைத் தடுக்க மேற்கொள்ளக்கூடிய சட்ட நடவடிக்கைகளும் தீர்வுகளும்" எனும் தலைப்பில் மனித உரிமை ஆணைக்குழுவைச் சேர்ந்த விசாரணை அதிகாரி ஜனாப் பெருஸ் கருத்துரை வழங்குவார். பிற்பகல் 2.30 மணிமுதல் 4 மணிவரை "துன்புறுத்தல்களால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான உளவியல் ரீதியான ஆலோசனைச் சேவைகள் உதவிகள்" எனும் தலைப்பில் சாந்திகம் அமைப்பைச் சேர்ந்த உளவியல்துறை மாணவன் டொக்டர் வ.அனவரதன் கருத்துரை வழங்குவார்.

இந்தக் கருத்தரங்கில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மாதர் கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

கல்வியியல்... - பா.தனபாலன்

# ஒழுக்க மீறல்களும் பாடசாலை சீல மேம்பாடும்



மாணவ நல்லொழுக்கத்துடன், சமூகத்தில் பொருந்திய, வாழத்துணைபுரியும் நல்லியல்புகளைப் பெற உதவுதலே பாடசாலைக் கல்வியின் அடிப்படை நோக்கமாகும். ஆனால் "கல்வியின் இலக்கு, மாணவர்களைத் தேர்வுகளில் மட்டும் வெற்றி பெறும்படி செய்தல்" என்னும் தவறான குறுகிய எண்ணத்துடன் இன்று பலர் செயற்படுகின்றனர். இந்த நிலையே முக்கியமாக மாணவரின் ஒழுக்கக்கேடு மற்றும் சமூக சீர்கேடுகள் அதிகரிப்பதற்கு காரணமாகவுள்ளது. குறிப்பிட்ட பாடத்தில் மாணவர்கள் கூடுதலான புள்ளி எடுத்தால் போதும் என்ற நிலையை ஆசிரியர்களும் விட்டொழித்து, "சீரிய" சமுதாயத்தையும் சிறந்த குடிமக்களையும் படைத்தலே எமது தொழில் என்ற ரீதியில் அக்கறையுடன் செயற்பட வேண்டும். இதற்குச் சமுதாய மயமாதல் நோக்குத் தேவையாகின்றது.

உதாரணமாக, ஒழுக்கவியல் மனப்பான்மைகளை மாணவரிடம் ஏற்படுத்தவே சமயக் கல்வி புகுத்தப்படுகின்றது. குறித்த ஒரு மாணவன் க.பொ.த. சாதாரணதரத்தில் சமய பாடத்தில் அதிவிசேட சித்தி பெறுகிறான். ஆனால் மிகவும் ஒழுக்க சீர்கேடானவனாகவும், கோவிலிலே தேவாரத்தைப் பாடத் தெரியாதவனாகவும் உள்ளான். இந்த வகையில், ஒழுக்கக் கல்வியான சமய பாடக் கல்வியின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா? இவ்வாறு மிகப் பல உதாரணங்கள் கூறலாம்.

## கல்வியின் குறிக்கோள்

"கல்வியானது பொதுவான ஒரு பண்பாட்டையும் தனியான பகுத்துணர்வையும், ஒழுக்க, சமூகப் பொறுப்புரிமை உணர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டும்" என ஐக்கிய நாடுகள் சாசனம் வலியுறுத்துகின்றது. அநேகமான சந்தர்ப்பங்களில் இன்று சமூகப் பொறுப்புரிமையைப் பின் நிலைக்குத் தள்ளி வைக்கும் போக்குகள் காணப்படுகின்றன. இதற்குக் காரணம், குருட்டுத்தனமான இரக்கமற்ற வகையில் போட்டி நிலைக்கு மாணவர்கள் தள்ளப்படுதலே ஆகும் எனக் கல்விச் சமூகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனை அனைவரும் தெளிவாக அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

ஒழுக்காற்று விழுமியங்களும், ஆன்மீக விழுமியங்களும் ஒருவருடைய சொந்தச் சமயத்திலும் பண்பாட்டிலுமிருந்து பிரதானமாகப பெறப்பட வேண்டும். அவை பாடசாலைகளில் சக நடத்தையை வெளிப்படுத்தும் வகையிற் கற்பிக்கப்பட வேண்டும். பாடசாலைப் பொதுப்பாட விதானத்தின் பல்வேறு மட்டங்களிலும் விழுமிய உள்ளடக்கம் அமைந்துள்ளது. அதை எவரும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆசிரியர்களும், அதிபர்களும், கல்வி நிர்வாகிகளும் சமூகத்தின் ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பு கொணடு மாணவர்களின் ஒழுக்கம் பேணும் நடவடிக்கைகளை வேகமாக அதிகரிக்க வேண்டும். இல்லையேல் நாடு மேலும் பல சீர்கேடுகளை எதிர்காலத்தில் அடைய நேரிடலாம்.

## சமுதாயக் கேடுகளுக்குக் காரணம்

பிறரிடம் காட்டப்படும் அனுதாபம், நேர்மை, நடுவுநிலை, நீதி, பண்பு, ஒழுக்கம், பெருந்தன்மை ஆகிய எல்லாவற்றுக்குமான அடிநாதமும் கல்வியே ஆகும். ஆனால் இளைஞர்களிடையே அமைதி இன்மை, விரக்தி, கிளர்ச்சிகள் வலுவடைந்தமை, சமுதாய எதிர்ப்பு நடவடிக்கைகள், அராஜகம், நீதி தவறியமைகள், குற்றச்செயல்கள் அதிகரித்தமை, தீவிரவாதப்போக்கு, ஆயுதப் போர்கள், இனப்பிரச்சினை இவற்றுக்கான காரணமும் கல்வியைச் சூழ்ந்தே உள்ளது. கல்வியோடு தொழில் வாய்ப்புக்களுக்குள்ள பொருத்தப்பாட்டின்மை, பரீட்சையில் சித்தி பெற்றார்களா? பெறவில்லையா? என்பதுடன் தொடர்பற்ற வகையில், பரீட்சைக்கு முன்னரோ, பின்னரோ, பாடசாலைகளிலிருந்து விலகியவர்களில் பெருந்தொகையானோர் வேலையற்றவர்களாய் விரக்தியுடன் இருத்தல், சமூக நீதி பிறழ்வடைந்தமை, அரசியல் லாபங்கள், பேராசைகள், சுயநலம் போன்ற காரணிகளே இன்றைய சமுதாயக் கேடுகளுக்கான முக்கிய காரணங்களாகவுள்ளன. இவற்றை எதிர்காலத்தில் தீர்த்து, சமூக நீதியின் பிறப்பிடமாகப் பாடசாலைகள் பணியாற்ற வேண்டிய அவசரம் தற்போது எழுந்துள்ளது.

பாடசாலையின் சமூகச் சுற்றாடல் இன்று வளர்ந்து விரிவடைந்து வருகின்றது. சமூக சேவைச் செயல்கள், தொழில் அடிப்படையிலான வேலைகள், முகாமைத்துவக் கருமங்கள், கல்விக் கடமைகள், பயனுள்ள பொழுதுபோக்கு அம்சங்கள், அரசியல் வேலைகள், சமயச் செயற்பாடுகள் போன்ற பல அம்சங்கள் பாடசாலைகளுடன் இரண்டறக் கலந்து வருகின்றன. மாணவர்கள் எங்கிருந்தெல்லாம் வருகின்றார்களோ, அங்கெல்லாம் பாடசாலையின் தாக்கம் உள்ளது. சமூக நீதியின் பிறப்பிடமாகப் பாடசாலை அமைந்து, நாடு எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சஞ்சீவியாகப் பாடசாலைக் கல்வியும், ஏனைய செயற்பாடுகளும் அமையவேண்டும். இவ்வாறாகச் சமுதாயத்துடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டு செயற்படும் பாடசாலை மாணவரின் ஒழுக்க நிலையும் மேலோங்க வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன.

## ஒழுக்க மாண்புக்கான வழிமுறைகள்

பாடசாலையை மையமாக வைத்துப் பல சமூக நிகழ்ச்சித் திட்டங்களையும் ஆக்கலாம். சுகாதாரம், சுத்தம், விவசாயம், வீட்டுத் தோட்டம் வளர்ந்தோர் கல்வியுடன் ஆங்கிலக் கல்வி, சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், தொழில் நுட்ப விஞ்ஞான அறிவை வழங்கும் திட்டங்கள் போன்றவற்றையும் நடைமுறைப்படுத்தலாம். அத்தோடு பாடசாலையைச் சூழவுள்ள மனித வளத்தைப் பயன்படுத்துவதால் பல வேலைகளைச் செய்யலாம். மாணவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சிகள் ஆண்கள், பெண்களுக்கான சாரணியம், சில விசேட பாடங்களைக் கற்பித்தல், அறநெறிப் போதனைகள், ஒழுக்கக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள். சமய அறிவினைப் பெருக்குதல் போன்றவற்றில் மதஸ்தலங்கள். சனசமூக நிலையங்கள். செஞ்சிலுவைச் சங்க அலகுகள், லயன்ஸ் கழகங்கள், இளைஞர் சேவை மன்றங்கள், விளையாட்டுக் கழகங்கள் போன்றவற்றுடன் தொடர்பு கொண்டு பயன்களைப் பெறலாம்.

மேற்குறிப்பிடப்பட்ட பல்வேறு செயற்பாடுகளில் பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர் மற்றும் சமூகத்தவர் பங்கு பற்றிப் பல்வேறு பயன்களையும், திறன்களையும் பெறலாம். முக்கியமாக மாணவர்களுக்கு சமூக வாழ்க்கையின் பயிற்சிக் களமாக பாடசாலைகள் செயற்படுதல் மிக அவசியமாகும். இதனூடாக எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக வாழும் ஒழுக்க, பண்பாடு அம்சங்களை மாணவர் உள்வாங்கிப் பயனடைவர்.

இன்று மாணவரிடையே அமைதியின்மை (Restlessness) ஒழுக்கக் குறைபாடுகள் "அதிகமாகி வருகின்றன. ஒழுங்கின்மை என்பது அறிவீனத்தினாலோ, உணர்ச்சிப் பெருக்கத்தினாலோ, வேண்டும் என்றோ மாணவர்களால் வரம்பு மீறிய பாடசாலைச் சமூக விதிகளுக்குப் புறம்பான செயல்களைக் குறிக்கும். இவை மாணவர் வாழ்வில் தீமைகளைச் செய்வதுடன் கற்றலுக்கு ஏற்ற சூழ்நிலையைக் கெடுத்து விடுகின்றது. மாணவனது ஒழுக்க நடத்தை அவனது பொருத்தப் பாடின்மையினின்றும் எழுவதாகும். இந்தப்பொருத்தப் பாடின்மைகள் உளப் போராட்டத் தாக்கங்களால் தோன்றுகின்[றன].

## ஆசிரியர் பொறுப்பு

சமூக எதிர்ப்பு நடத்தையின் அடிப்படைக் காரணங்களாக உளப் போராட்டங்களைத் தோற்றுவிப்பதில், காப்புணர்ச்சியின்மை, மனவெழுச்சிச் சிக்கல்கள், மனமுறிவையும் தீமையையும் விளைவிக்கக் கூடிய நிலைகள் போன்ற பல ஏதுக்கள் செயற்படுகின்றன. காப்புணர்ச்சி மாணவரின் நல் வளர்ச்சிக்கு இன்றியமையாத ஓர் உளத் தேவையாகும். அன்பின்றி நடத்தப் பெறும் குழந்தைகள், இந்த உணர்ச்சியின்மையால் ஒழுங்கீனமான நடத்தைகளை மேற்கொள்கின்றன. ஆளுமை வளர்ச்சிக்கும் அன்பு வழியில் செயற்படுவதே சிறப்பானது. ஆசிரியர்கள் உளவியலறிவைக் கூடுதலாகப் பெற்று, அன்பு நெறியில் மாணவர்களை வெளிப்படுத்தும் போது அவர்கள் ஒழுக்கமானவர்களாகத் திகழ்வது உறுதி.

மாணவர்களின் குடும்பப் பொருளாதாரப் பின்னணிகள் வேறுபட்டவை என்பதை ஆசிரியர்கள் மறத்தலாகாது. மகிழ்ச்சியான குடும்பம், மகிழ்ச்சியற்ற குடும்பம், வசதி நிறைந்த குடும்பம், வசதி குறைந்த குடும்பம் என குடும்ப பொருளாதார தரங்கள் வேறுபட்டவை. இவை மாணவர்களின் கல்வி ஆர்வத்தை, முன்னேற்றத்தைப் பாதிக்கின்றன. இப்படி வேறுபட்ட பின்னணிகளுடன் வரும் மாணவர்களுக்கு, மகிழ்ச்சியுடன் அறிவைக் கொடுக்கும் அமைப்பாகப் பாடசாலைகள் அமையவேண்டும். உணவு, உடை, கொப்பி, பென்சில் போன்றவை இல்லாமல் சில மாணவர்கள் பாடசாலைக்கு வரநேரிடும். இந்த இல்லாமை அவர்களுடைய நடத்தையைப் பாதிக்கின்றது. கல்வியில் பின்தங்க இது ஏதுவாகின்றது. விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடத்தூண்டும் இவர்களின் தவறான செயல்களைக் கண்டு ஆத்திரமடைந்து, தண்டனை வழங்காமல் தவறான நடத்தைக்குரிய காரணத்தைக் கண்டு பிடித்து அதை நீக்க முயல வேண்டும்.

பிள்ளைகளின் ஆர்வத்தையும், ஆற்றல்களையும் சரியாகக் கணிக்க முடியாத பெற்றோர்கள், தம் விருப்பங்களையும், இலட்சியங்களையும் அவர்கள் மேல் திணித்து, "படி படி" என எந்நேரமும் அவர்களை நிர்ப்பந்திக்கின்றனர். படிக்காவிட்டால் தண்டனை. இதேநிலை பாடசாலையிலும் நீடித்தால் ஆரோக்கியமான மாணவ சமுதாயத்தை ஏறபடுத்த முடியாது. மாணவர்களை - பிள்ளைகளைப் புரிந்து அன்பு காட்டி கற்றலில் விருப்பத்தை ஏற்படுத்த தூண்டல்களை ஏற்படுத்தும் போது பல பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன.

புகழ்பெற்ற விஞ்ஞான கண்டுபிடிப்பாளர் லாப்லாஸ் மரணப்படுக்கையில் கிடந்த சமயம், அவரது நண்பர்கள், அவர் எழுதிய நூல்கள் பற்றியும், செய்த ஆய்வுகள் பற்றியும புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தனர். வாழ்க்கையில் இவை முக்கியமானவை அல்ல என்றார் லாப்லாஸ். அப்படியானால் எதுதான் முக்கியம்? என நண்பர்கள் கேட்க, மிகவும் கஷ்டப்பட்டு, தன் சக்தி முழுவதையும் திரட்டி "அன்பு" எனக் கூறித் தன் இறுதி மூச்சை விட்டார் அந்த அறிஞர்.

❋❋❋

---

தகவல் தொழில்நுட்பம்... - த.தவரூபன்

# மின்னரசுக்கான ஏது நிலைகளும் தமிழ் தகவல் தொழில் நுட்பமும்

பல மைல்கற்களை தாண்டி நம் அன்றாட வாழ்க்கையில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துவதோடு மட்டுமன்றி, எதிர்காலத்தில் உலகத்தின் ஒவ்வொரு மாற்றத்துக்கும் காரணமாக இருக்கப்போகின்ற தகவல் தொழில்நுட்பம், இன்று வெகு வேகமாக மனித வாழ்வியளன் ஒவ்வொரு அசைவிலும் ஊடுருவியுள்ளமை கண்கூடு. இந்தத் தகவல் தொழில்நுட்பத்தின் படிமுறை வளர்ச்சி பற்றி இங்கு விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆயினும் என்னால் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்ற கட்டுரைக் கருவுக்குள் செல்ல முன்பு, சில விடயங்களை இந்த இடத்தில் தெளிவுபடுத்த வேண்டிய தேவை இருக்கின்றது.

இன்று எம்முன் பரந்து கிடக்கும் தொழில் நுட்பங்கள் அனைத்திலும் மேற்சொன்ன தகவல் தொழில்நுட்பம் தான் பிரதான பங்கு வகிக்கின்றது. கணினியியல் சம்பந்தப்பட்ட எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினை. ஒரு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதற்காக ஒரு பொதுவான மொழியை மனித சமூகம் கட்டாயம் தெரிந்திருக்கவேண்டும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. எமக்காக தொழில் நுட்பமேயன்றி தொழில்நுட்பத்துக்காக நாங்கள் அல்ல.

தகவல் தொழில் நுட்பம் பெரும்பாலும் ஆங்கில மொழியாதிக்கத்தினூடாக வீறுநடை போட்டுக்கொண்டிருக்க, அந்தத் தொழில் நுட்பத்தின் பயன்பாட்டை மனித சமூகத்தின் ஒவ்வொரு பிரதிநிதியும் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள், அந்தந்த சமூகப்பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்டன. மேற்கொள்ளப்படுகின்றன. இது ஒருவகையில் தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியில் உலகத்தின் ஒவ்வொரு பகுதியில் இருந்தானதும் பெரும்பாலானவர்களினதுமான பங்களிப்பை உறுதி செய்கிறது.

**சிங்கப்பூரில் இன்று நடைபெறவுள்ள 7 ஆவது உலகத் தமிழர் தகவல் தொழில்நுட்ப மாநாட்டில் வெப் தமிழன், ஆசிரியர் தவரூபன் சமர்ப்பிக்கும் கட்டுரை.**

இந்த தொழில்நுட்பத்துக்கும் ஏனைய தொழில்நுட்பங்களுக்கும் இடையில் ஒரு முக்கிய வேறுபாடு இருக்கின்றது. மனிதன் தான் பயன்படுத்தும் தொழில்நுட்பங்கள் யாவும் தனக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும் என பெரிதும் எதிர்பார்க்கின்றான், அத்துடன் குறித்த தொழில்நுட்பத்தின் வழி தன்னை இயைபாக்கிக்கொள்வதைவிட, இந்தத்தொழில்நுட்பங்களை தன்னுடைய தேவைக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்வதில் கூடிய நாட்டம் செலுத்துகின்றான்.

உதாரணமாக, வானொலித் தொழில் நுட்பததை எடுத்துக்கொள்வோமே. இதனைப் பயன்படுத்துவதற்கு மனித இனத்தின் எந்த வகையிலான பிரிவினருக்கும் சிக்கல் இருக்கவில்லை. தனக்கு விளங்கக்கூடிய வகையில், மொழியில் பயன்படுத்திக் கொள்ளலாம். இங்கு உள்ளீடு, வெளியீடு, ஒன்றில் ஒன்று தங்கியிருக்கவில்லை. அதனால் இத்தொழில் நுட்பம் நுகரப்படுவதில் எவ்வித இடர்பாடும் இருக்காது. ஆனால் தகவல் தொழில்நுட்பத்தில் உள்ளீடு, வெளியீடுகளுக்கிடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. குறித்த வெளியீடு எமக்கு வேண்டுமாயின், வழங்கப்படக்கூடிய உள்ளீடு என்பதற்கு என சில வரையறைகள் இருக்கின்றன. இதுதான் வேறுபாடு.

இந்த வேறுபாடுதான் தகவல் தொழில் நுட்பத்தில் மனிதன் ஒவ்வொரு கட்டத்திலும்

அந்தவகையில்தான், இந்தத் தமிழ் தகவல் தொழில்நுட்பம் என்ற விடயம் இன்று நம்மிடையே பேசப்படுகின்றது. இதன்போது தான் தமிழில் கணினி தமிழ் இணையம் என்றெல்லாம் பேசுகின்றோம். இந்த விடயம் எம்மில் பலராலும் விவாதிக்கப்படுகின்றதும், பயன்பாட்டுக்குட்படுத்தப்படுவதும் இன்று சாதாரண விடயமாகிவிட்டது. இந்த நிலையில்தான், மின்னரசு பற்றிக் கவனம் செலுதது கின்ற எனது இந்தக் கட்டுரை சமர்ப்பிக்கப்படுகின்றது. தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, அரசாங்கம் ஒன்றின் நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தலும், பராமரித்தலும் மின்னரசாங்கம் எனக் கருத்துப்படும். மின்னரசாங்கம் பற்றியும் இதனது தாற்பரியம் பற்றியும் 2002இல் கலிபோர்னியா தமிழ் இணைய மாநாட்டில் அருள்மகிழ்நனினால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரையின் அறிமுகத்திலும், 2003 இல் சென்னையில் நடைபெற்ற தமிழிணைய மாநாட்டில் ஜயராதா மற்றும் சாந்தகுமார் ஆகிய இருவரினால் இணைந்து வழங்கப்பட்ட கட்டுரையிலும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஈழத்தில் இன்று மின்னரசு ஒன்று இருக்கின்றதா அல்லது கட்டமைந்து வருகின்றதா? இது என்ன கேள்வி? இதனை இற்றைக்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் கேட்டிருந்தால், நிச்சயமாக இல்லை என்றே பதிலிறுத்திருப்பேன். (தொடரும்)

# 2004/05 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கான இசற் ஸ்கோர் அடிப்படையில் மாவட்ட ரீதியான வெட்டுப் புள்ளி விபரம்!

| மாவட்டம் | மருத்துவம் | பல் மருத்துவம் | மிருக வைத்தியம் | விவசாய விஞ்ஞானம் | உணவும் ஊட்டமும் | உயிரியல் விஞ்ஞானம் | பிரயோக விஞ்ஞானம் (உயிரியல் விஞ்ஞானம்) | பொறியியல் (MPR) | பொறியியல் (EM) | பொறியியல் (TM) | கணிய அளவீடு | கணினி விஞ்ஞானம் | பௌதிக விஞ்ஞானம் | நில அளவை விஞ்ஞானம் | பிரயோக விஞ்ஞானம் (பௌதிக விஞ்ஞானம்) | முகாமைத்துவக் கற்கைநெறி | சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும் | வணிகவியல் | கலை$ | கலை (SP)$ (பொதுசன ஊடகம்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 2.0962 | 2.0438 | 1.9586 | 1.4217 | 1.6365 | 1.6626 | 1.3863 | 2.0947 | 1.9002 | 2.0094 | 1.8697 | 1.9038 | 1.4219 | 1.6484 | 1.2637 | 1.6955 | 1.6739 | 1.6350 | 1.3114 | 1.2245 |
| கம்பஹா | 1.7893 | 1.7745 | 1.7264 | 1.2917 | 1.4664 | 1.4752 | 1.2745 | 1.7735 | 1.7565 | 1.7580 | 1.6754 | 1.6935 | 1.2428 | 1.5450 | 1.1512 | 1.6332 | 1.6211 | 1.6077 | 1.3365 | 1.2245 |
| களுத்துறை | 1.8809 | 1.8780 | 1.8628 | 1.2964 | 1.6024 | 1.4693 | 1.2715 | 1.8841 | 1.8518 | 1.8803 | 1.8407 | 1.8110 | 1.2681 | 1.6019 | 1.2194 | 1.6453 | 1.6359 | 1.6238 | 1.3695 | 1.2245 |
| மாத்தளை | 1.8792 | 1.8664 | 1.7980 | 1.2763 | 1.5087 | 1.2675 | 1.2093 | 1.7219 | 1.7087 | 1.7190 | 1.3399 | 1.6586 | 0.9997 | 1.5843 | 0.9463 | 1.3696 | 1.4764 | 1.4309 | 1.3695 | 1.2245 |
| கண்டி | 2.0298 | 2.0217 | 1.9104 | 1.4455 | 1.5425 | 1.5717 | 1.3715 | 1.9463 | 1.8419 | 1.9083 | 1.7577 | 1.8466 | 1.3360 | 1.5013 | 1.2399 | 1.5950 | 1.6362 | 1.5857 | 1.3695 | 1.2245 |
| நுவரெலியா | 1.2145 | 1.2015 | 1.1651 | 0.8925 | 1.1592 | 0.7189 | 0.6899 | 0.8741 | 0.8626 | 0.8417 | 0.7703 | 0.7833 | 0.0575 | 0.7515 | 0.2768 | 1.4337 | 1.6858 | 1.4033 | 1.3614 | NQC |
| காலி | 2.0536 | 2.0084 | 1.9570 | 1.4413 | 1.6049 | 1.6113 | 1.3851 | 2.0597 | 1.9286 | 2.0102 | 1.8588 | 1.8596 | 1.3752 | 1.6756 | 1.2706 | 1.7133 | 1.7009 | 1.6384 | 1.3695 | 1.2245 |
| மாத்தறை | 2.0481 | 2.0392 | 1.9125 | 1.4622 | 1.6540 | 1.4840 | 1.3771 | 2.0315 | 1.9127 | 2.0169 | 1.8616 | 1.9110 | 1.3315 | 1.5268 | 1.2773 | 1.6852 | 1.6721 | 1.6235 | 1.2411 | NQC |
| ஹம்பாந்தோட்டை | 1.9420 | 1.9386 | 1.9173 | 1.3793 | 1.5778 | 1.1923 | 1.1670 | 1.8888 | 1.8715 | 1.8679 | 1.8295 | 1.8811 | 1.1261 | 1.6805 | 1.0755 | 1.6294 | 1.6257 | 1.6087 | 1.3695 | NQC |
| யாழ்ப்பாணம் | 1.9372 | 1.9210 | 1.9056 | 1.3716 | 1.6240 | 1.1576 | 1.1011 | 1.8648 | 1.8206 | 1.8511 | 1.7962 | 1.8194 | 1.2934 | 1.6724 | 1.2733 | 1.5302 | 1.4298 | 1.4769 | 1.3695 | NQC |
| கிளிநொச்சி | 1.3783 | 1.3408 | 1.2654 | 1.0621 | 0.9516 | 0.8140 | 0.8036 | 1.0318 | 0.9413 | 0.9023 | 0.8406 | 0.8968 | 0.2766 | 0.8643 | 0.1560 | 1.4653 | 1.4510 | 1.4602 | 1.2767 | NQC |
| மன்னார் | 1.4298 | 1.1876 | 0.9043 | 0.7645 | 0.8581 | 0.5759 | 0.5505 | 1.0840 | 1.0590 | 0.9583 | 0.6558 | 0.9370 | 0.1878 | 0.6737 | 0.4232 | 1.4108 | 1.1521 | 1.2879 | 1.1921 | NQC |
| முல்லைத்தீவு | 1.3913 | 1.3318 | 1.2303 | 0.8599 | 1.2290 | 0.7394 | 0.7381 | 1.3126 | 1.2694 | 1.3004 | 1.0593 | 0.9709 | 0.6887 | 1.1634 | 0.5892 | 1.5999 | 1.5684 | 1.5863 | 1.3071 | NQC |
| வவுனியா | 1.7742 | 1.7643 | 1.7400 | 1.4702 | 1.6251 | 1.3636 | 1.3430 | 1.9288 | 1.8003 | 1.9114 | 1.8714 | 1.7459 | 1.1853 | 1.6667 | 1.0038 | 1.5924 | 1.6300 | 1.5560 | 1.3695 | NQC |
| திருகோணமலை | 1.5007 | 1.4795 | 1.4147 | 1.0674 | 1.3905 | 0.8497 | 0.9799 | 1.5307 | 1.4921 | 1.5292 | 1.4504 | 1.3292 | 0.6453 | 1.3271 | 0.5858 | 1.4507 | 1.6218 | 1.4263 | 1.2977 | NQC |
| மட்டக்களப்பு | 1.7272 | 1.7020 | 1.7013 | 1.3538 | 1.6491 | 1.1636 | 1.1188 | 1.4590 | 1.3658 | 1.3843 | 1.3936 | 1.3394 | 0.7650 | 1.3161 | 0.7632 | 1.3900 | 1.3714 | 1.3371 | 1.3695 | NQC |
| அம்பாறை | 1.7539 | 1.7023 | 1.6429 | 1.3198 | 1.5874 | 1.1943 | 1.1647 | 1.5181 | 1.5061 | 1.5104 | 1.5104 | 1.4135 | 0.7892 | 1.3995 | 1.1139 | 1.4469 | 1.6034 | 1.4130 | 1.3695 | NQC |
| புத்தளம் | 1.7666 | 1.7047 | 1.7032 | 1.1248 | 1.4547 | 1.2439 | 1.0745 | 1.6639 | 1.5971 | 1.6304 | 1.4762 | 1.5280 | 0.9697 | 1.4980 | 0.8842 | 1.4390 | 1.6718 | 1.4368 | 1.3403 | 1.2245 |
| குருநாகல் | 1.9057 | 1.9013 | 1.8920 | 1.4053 | 1.5016 | 1.5202 | 1.3819 | 1.9927 | 1.8811 | 1.9714 | 1.8582 | 1.8742 | 1.3086 | 1.6220 | 1.2286 | 1.6039 | 1.6025 | 1.6083 | 1.3348 | NQC |
| அநுராதபுரம் | 1.7887 | 1.7704 | 1.7204 | 1.1848 | 1.4695 | 1.1947 | 1.1319 | 1.5597 | 1.4752 | 1.5953 | 1.5006 | 1.4474 | 1.0672 | 1.3191 | 0.9409 | 1.4087 | 1.6253 | 1.5051 | 1.3012 | NQC |
| பொலநறுவை | 1.4949 | 1.4838 | 1.4277 | 0.9823 | 1.0030 | 0.7637 | 0.7539 | 1.0292 | 1.0085 | 0.9648 | 0.7139 | 0.9141 | 0.0575 | 0.7088 | 0.0411 | 1.3876 | 1.6251 | 1.4684 | 1.2240 | NQC |
| பதுளை | 1.6026 | 1.5925 | 1.5811 | 1.3879 | 1.4241 | 1.1288 | 1.0856 | 1.6324 | 1.6064 | 1.6265 | 1.5686 | 1.4736 | 0.8930 | 1.3581 | 0.8524 | 1.5526 | 1.6515 | 1.5425 | 1.3372 | 1.2245 |
| மொனராகலை | 1.4471 | 1.3950 | 1.3599 | 1.0287 | 1.2914 | 0.8657 | 0.8243 | 1.2261 | 1.1559 | 1.1640 | 0.9261 | 1.0915 | 0.3462 | 0.9997 | 0.2715 | 1.4304 | 1.4223 | 1.3610 | 1.3251 | NQC |
| கேகாலை | 1.8825 | 1.8125 | 1.7967 | 1.3175 | 1.3310 | 1.2918 | 1.2816 | 1.8675 | 1.8638 | 1.8648 | 1.8051 | 1.8094 | 1.2212 | 1.5958 | 1.1780 | 1.5931 | 1.6400 | 1.5792 | 1.3348 | NQC |
| இரத்தினபுரி | 1.8902 | 1.8591 | 1.8385 | 1.2746 | 1.3787 | 1.3940 | 1.2677 | 1.7560 | 1.7205 | 1.7489 | 1.6511 | 1.6874 | 1.0539 | 1.5901 | 0.9447 | 1.6400 | 1.6625 | 1.6168 | 1.3695 | 1.2245 |

| மாவட்டம் | கலை (SP)$ (ஆற்றுகைக் கலை) | கலை (SAB)$ (A) | கலை (SAB)$ (B) | முகாமைக் கற்கைகள் (SVT)(A) | முகாமைக் கற்கைகள் (SVT)(B) | கட்டடக் கலை | உருவமைப்பு (கட்டடக் கலை) | சட்டம் | தகவல் தொழில்நுட்பம் | முகாமையும் தகவல் தொழில்நுட்பமும் | பொதுமுகாமை (நிர்வாகம்) | பட்டின, நாட்டு திட்டமிடல் | சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும்$ | ஆயுர்வேத மருத்துவமும் சத்திரசிகிச்சையும்$ | யுனானி மருத்துவமும் சத்திரசிகிச்சையும்$ | புடைவை, துணி உருவமைப்பு | உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | சித்தவைத்தியம்$ | தாதியியல் | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 1.1724 | 1.3543 | 1.5351 | 1.6024 | 1.5874 | 0.6152 | 1.1462 | 1.8593 | 1.9436 | 1.8036 | 1.6717 | 1.7507 | 1.5949 | 1.2572 | 1.1074 | 0.7545 | 1.7863 | 0.8420 | 1.7229 | 1.7529 |
| கம்பஹா | 1.1724 | 1.3543 | 1.5351 | 1.5960 | 1.5857 | 1.0900 | 0.8075 | 1.7948 | 1.6915 | 1.6669 | 1.6178 | 1.5872 | NQC | 1.2572 | 1.1074 | 0.7810 | 1.6180 | 0.8420 | 1.4693 | 1.6301 |
| களுத்துறை | 1.1724 | 1.3543 | 1.5351 | 1.6075 | 1.5747 | 0.8932 | 1.1975 | 1.8437 | 1.8592 | 1.7568 | 1.6300 | 1.7219 | 1.5949 | 1.2572 | NQC | 1.0101 | 1.7908 | NQC | 1.7327 | 1.6476 |
| மாத்தளை | NQC | NQC | NQC | 1.3496 | 1.3122 | 0.1946 | NQC | 1.7471 | 1.6769 | 1.6007 | 1.5526 | 1.5818 | NQC | NQC | NQC | 1.0286 | 1.6252 | NQC | 1.2177 | 1.3999 |
| கண்டி | 1.1724 | 1.3543 | 1.5351 | 1.5780 | 1.5582 | 1.1027 | 1.0883 | 1.7683 | 1.8533 | 1.6785 | 1.7153 | 1.6766 | 1.5949 | 1.2572 | 1.1074 | 0.9597 | 1.8168 | 0.8420 | 1.7109 | 1.6555 |
| நுவரெலியா | NQC | 1.3543 | NQC | 1.3836 | 1.3803 | 1.1825 | NQC | 1.7448 | 0.7709 | 1.6601 | 1.7468 | 1.6577 | 1.5949 | NQC | NQC | NQC | 1.0994 | NQC | 1.0490 | 0.5770 |
| காலி | 1.1724 | 1.3543 | 1.5351 | 1.6056 | 1.5865 | 0.8757 | 1.0209 | 1.8972 | 1.9420 | 1.8167 | 1.7712 | 1.7518 | 1.5949 | 1.2572 | NQC | 0.7190 | 1.8360 | NQC | 1.5980 | 1.7404 |
| மாத்தறை | NQC | 1.3543 | 1.5351 | 1.5992 | 1.5809 | 0.8317 | 1.4422 | 1.8474 | 1.9115 | 1.7822 | 1.7355 | 1.7731 | 1.5949 | 1.2572 | NQC | 0.8459 | 1.8582 | NQC | 1.7228 | 1.7534 |
| ஹம்பாந்தோட்டை | NQC | 1.3543 | 1.5351 | 1.5922 | 1.5753 | 0.6252 | NQC | 1.8093 | 1.8046 | 1.0550 | 1.6259 | 1.5668 | NQC | 1.2572 | NQC | NQC | 1.7916 | NQC | 1.4710 | 1.2834 |
| யாழ்ப்பாணம் | NQC | 1.3543 | NQC | 1.4499 | 1.4342 | 0.7048 | NQC | 1.6930 | 1.8310 | 1.1776 | 1.4438 | 1.6925 | NQC | NQC | NQC | NQC | 1.8107 | 0.8420 | 1.7526 | 1.7494 |
| கிளிநொச்சி | NQC | NQC | NQC | 1.4400 | 1.4295 | NQC | NQC | 1.4007 | 0.6258 | NQC | 1.5159 | 1.2718 | NQC | NQC | NQC | NQC | 1.0574 | NQC | 0.7585 | NQC |
| மன்னார் | NQC | NQC | NQC | 1.2577 | 1.2493 | NQC | NQC | 1.4365 | NQC | NQC | 1.6359 | 0.8700 | NQC | NQC | NQC | NQC | 0.4702 | NQC | 0.4562 | NQC |
| முல்லைத்தீவு | NQC | NQC | NQC | 1.5628 | 1.5330 | NQC | NQC | 1.5981 | 0.9658 | 0.7094 | 1.5201 | 1.4535 | NQC | NQC | NQC | NQC | 0.9390 | NQC | 0.6803 | 0.4676 |
| வவுனியா | NQC | 1.3543 | 1.5351 | 1.5465 | 1.5431 | NQC | NQC | 1.8627 | 1.8624 | NQC | 1.6777 | 1.6261 | NQC | NQC | NQC | NQC | 1.6769 | 0.8420 | 1.4419 | 1.5885 |
| திருகோணமலை | NQC | NQC | NQC | 1.3878 | 1.3629 | NQC | NQC | 1.6247 | 1.3839 | 1.2140 | 1.6974 | 1.4614 | 1.5949 | NQC | 1.1074 | NQC | 1.2307 | NQC | 1.1306 | 1.2807 |
| மட்டக்களப்பு | NQC | 1.3543 | NQC | 1.3258 | 1.3496 | NQC | NQC | 1.7647 | 1.5574 | 1.4668 | 1.3000 | 1.5219 | NQC | NQC | 1.1074 | NQC | 1.6668 | 0.8420 | 1.3627 | 1.4230 |
| அம்பாறை | NQC | 1.3543 | NQC | 1.4049 | 1.3774 | 1.4516 | NQC | 1.7130 | 1.4886 | 1.4797 | 1.6675 | 1.7127 | 1.5949 | NQC | 1.1074 | 1.5306 | 1.5546 | 0.8420 | 1.4901 | 1.3894 |
| புத்தளம் | NQC | NQC | NQC | 1.3996 | 1.3937 | NQC | 1.0438 | 1.6860 | 1.5305 | 1.3837 | 1.4498 | 1.5105 | 1.5949 | NQC | 1.1074 | NQC | 1.6671 | NQC | 1.3216 | 1.4150 |
| குருநாகல் | 1.1724 | 1.3543 | 1.5351 | 1.5882 | 1.5725 | 0.9497 | 0.6766 | 1.8388 | 1.8127 | 1.7674 | 1.6641 | 1.7575 | NQC | 1.2572 | 1.1074 | 0.8852 | 1.7886 | NQC | 1.7689 | 1.7597 |
| அநுராதபுரம் | NQC | 1.3543 | NQC | 1.3801 | 1.3777 | 0.9667 | 0.8514 | 1.8574 | 1.4031 | 1.7952 | 1.7041 | 1.6954 | NQC | 1.2572 | NQC | 1.27 | 1.7309 | NQC | 1.4903 | 1.3510 |
| பொலநறுவை | NQC | NQC | NQC | 1.3771 | 1.3706 | NQC | NQC | 1.4633 | 0.7791 | 1.2368 | 1.7653 | 1.3771 | NQC | NQC | NQC | 0.2951 | 1.3243 | NQC | 1.0758 | 0.7731 |
| பதுளை | 1.1724 | NQC | NQC | 1.5357 | 1.5219 | 0.6767 | 1.1806 | 1.7652 | 1.4600 | 1.4344 | 1.6942 | 1.6473 | 1.5949 | 1.2572 | NQC | 0.1207 | 1.4815 | NQC | 1.4695 | 1.3374 |
| மொனராகலை | NQC | NQC | NQC | 1.3718 | 1.3538 | NQC | NQC | 1.6546 | 0.7194 | NQC | 1.4287 | 1.3315 | NQC | NQC | NQC | NQC | 1.1063 | NQC | 1.2434 | NQC |
| கேகாலை | 1.1724 | 1.3543 | 1.5351 | 1.5686 | 1.5601 | 1.0866 | NQC | 1.7083 | 1.8053 | 1.6837 | 1.5926 | 1.6904 | 1.5949 | 1.2572 | 1.1074 | 0.9974 | 1.8351 | NQC | 1.7078 | 1.5428 |
| இரத்தினபுரி | 1.1724 | 1.3543 | 1.5351 | 1.6007 | 1.5810 | 0.1472 | 0.8931 | 1.8206 | 1.8062 | 1.6398 | 1.7117 | 1.7260 | 1.5949 | 1.2572 | NQC | 0.8492 | 1.7426 | NQC | 1.6642 | 0.6036 |

MPR -மொறட்டுவ, பேராதனை, றுகுணு பல்கலைக்கழகங்களில் உள்ளது.
EM -நில வளங்கள் இயந்திரவியல். TM -புடைவை, துணி தொழில்நுட்பம்
SP-கொழும்பு பல்கலைக்கழகத்தில், சிறிபாளி வளாகத்தில் மட்டும் உள்ளது.
SVT-யாழ், சப்ரகமுவ பல்கலைக்கழங்களிலும், வவுனியா வளாகத்திலும் மட்டும் உள்ளது NQC - தகுதியுடைய விண்ணப்பதாரி இன்மை.
SAP- சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மட்டும்.
S 100% நாடளாவிய ரீதியில் திறமை.
முகாமைக் கற்கைகள் SVT - A வணிகப் பிரிவு, B எல்லாப் பிரிவும்
கலை SAB - A கலைப் பிரிவு, B- எல்லாப் பிரிவும்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# தினேஷ் ராஜரட்ணம் ஈராக்கில் விடுதலை!

## வெளிவிவகார அமைச்சு உறுதி

(கொழும்பு)

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட தினேஷ் ராஜரட்ணம் விடுவிக்கப்பட்டுவிட்டதாக வெளிவிவகார அமைச்சு உறுதியளித்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் 28 ஆம் திகதி பங்களாதேஷ் நாட்டவரான அபுல் காசிம் என்பவருடன் சேர்த்து ட்ரக் சாரதியான தினேஷ் ராஜரட்ணம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டிருந்தார்.

சுமார் ஒன்றரை மாதங்களாக இவர்களைக் கடத்தி வைத்திருந்த அல் - அரல் - தன்னா என்ற இஸ்லாமிய தீவிரவாதிகள் நேற்று இவர்களைப் பத்திரமாக விடுவித்ததாகத் தெரியவருகிறது.

இவர் லெபனானில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும், விரைவில் இலங்கைக்கு அழைத்துவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

(01)

# பத்திரிகை அலுவலகம் மீது மட்டக்களப்பில் குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அரசடியிலுள்ள தினக்குரல் பத்திரிகையின் பிராந்திய அலுவலகம் மீது நேற்று நண்பகலும் கைக்குண்டு வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது.

அலுவலக ஊழியர்கள் வழமையான பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம், அங்குவந்த இனந்தெரியாத நபரொருவர் இந்தக் கைக்குண்டை வீசிவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றதாகத் தெரியவருகிறது.

வீசப்பட்ட கைக்குண்டு முன்பக்கக் கண்ணாடியை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று வீழ்ந்தபோதிலும் அது வெடிக்கவில்லை.

இதனையடுத்து பொலிஸார் அங்கு விரைந்துசென்று இராணுவ குண்டு செயலிழக்கும் பிரிவினரின் உதவியுடன் அந்தக் கைக்குண்டைச் செயலிழக்கச் செய்தனர்.

இந்தச் சம்பவத்தில் கண்ணாடி வெட்டியதில் அங்கிருந்த பெண் எழுத்தாளரொருவர் காயமடைந்தார்.

# மனித உரிமைகள் தினத்தில் திருமலையில் நடைபவனி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் மனித உரிமைகள் தினமான நேற்று மாணவர்கள் மனித உரிமைகளை வலியுறுத்தி சமாதான நடைபவனி ஒன்றை நடாத்தினர். இந்த நடைபவனியில் இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்களும், ஆசிரியர்களும் பங்கேற்றனர்.

மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு ஆரம்பமான இந்தப் பவனி - கடற்படைதளவீதி, தபாற்கந்தோர் வீதி, மின்சார நிலைய வீதி புகையிரத நிலையவீதி ஊடாக புனித பத்திமா கல்லூரியைச் சென்றடைந்தது.

அங்கு மனித உரிமைகளை பற்றி மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் கலை நிகழ்வுகளும், கருத்தரங்குகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் சட்டத்தரணி கண்ணதாசன், திருகோணமலை மாவட்ட பிரதிபொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசிங்க, திருகோணமலை மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் திருமதி மதியாபரணம் ஆகியோர் கலந்து கொண்டு மனித உரிமைகள் குறித்து கருத்துரை வழங்கினர். திருகோணமலை மாவட்ட மனித உரிமைகள் ஆனைக்குழுவும், பொலிஸாரும் இணைந்து இந்த ஏற்பாட்டை செய்திருந்தனர்.

(10) (04)

# எமது விடுதலைப் போரின்...

என அனைவரும் ஒன்றிணைந்து இங்கே இருந்து மனித உரிமைகள் செயலகத்தை அமைத்திருக்கின்றனர்.

இனிமேல் தான் மக்களின் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை வெளிக்கொண்டு வரும் வகையில் எமது தேசகட்டுமானத்திற்குத் துணை நிற்கின்ற வகையில் எங்களுக்கான விழுமியங்கள், கோட்பாடுகளை தெளிவுபடுத்தி எமது தேசத்தை கட்டியெழுப்புகின்ற ஒரு பணியையும் எமது மனித உரிமைகள் செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

இனி மேல் கடந்த காலத்தில் எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட பல்வேறு மனித உரிமைகள் வெளிக்கொண்டு வரப்படும்.

இவ்வாறு மக்களின் பல்வேறுபட்ட கடந்தகால மனித உரிமைகள் நடவடிக்கைகளை வெளிக்கொணருவதற்காக செயற்படும் இந்த மனித உரிமை செயலகத்தின் செயற்பாடுகளோடு நாங்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி இதன் செயற்பாட்டை மேம்படுத்த வேண்டும் எனவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் இயக்குநர் கருணாரத்தினம் அடிகளார் தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் துறைசார் பொறுப்பாளர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் என பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் சட்டத்தரணி சிவபாலன், தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலர் மகாசிவம், நிமலன் கார்த்திகேயன், சிறீ.அருளானந்தம், ஆகியோருடனான கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

இவர்கள் மனித உரிமைகள் தொடர்பான பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்தனர்.

# மகேஸ்வரன் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## ஜாதிக ஹெல உறுமய கூறுகிறது

(கொழும்பு)

நாடாளுமன்ற சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டாரவுக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக அல்லது எதிராக வாக்களிப்பது என்பது தொடர்பாக ஓரிரு தினங்களில் ஜாதிக ஹெல உறுமய முடிவுசெய்யும் என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வண.அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் நடவடிக்கையை தமது கட்சி முழுமையாக எதிர்ப்பதாகவும், இவரது இந்த நடவடிக்கைக்கு தாம் ஒருபோதும் ஆதரவு வழங்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாடாளுமன்றில் மகேஸ்வரன் நடந்துகொள்ளும் முறையானது கண்ணியமற்ற ஒரு செயற்பாடாகும். இவரது இந்த செயற்பாட்டிற்கு பின்னால், ஒரு கட்சி அல்லது அமைப்பு உள்ளது. எனவே, எமது கட்சி கோருவது என்னவெனில் இவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதேயாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்கா நாடாளுமன்றதுக்கு வருவதற்கு அரசியலமைப்பில் ஏதாவது மாற்றுவழி இருந்தால் அவர் வரலாம். இதற்கு நாம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எமது முழுமையான ஆதரவை வழங்குவோம்.

மதமாற்றத் தடுப்புச் சட்டம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அரசாங்கத்தில் இருந்து சாதகமான பதில் எவையும் கிடைக்கவில்லை. இந்தக் கோரிக்கையின் சில பகுதி களில் உள்ள சரத்துக்கள் நீக்கப்பட்டதன்பின்னர் உயர் நீதி மன்றத்தால் சட்டமூலமாக அது நிறைவேற்றப்படவேண்டும். ஆனால், மதமாற்றத் தடைச் சட்டத்தினை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதில் அரசாங்கம் தோல்விகண்டுவிட்டது.

இதேசமயம், மதமாற்றத் தடைச் சட்டத்தை எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் நாடாளுமன்றில் நிறைவேற்ற அரசாங்கம் தவறினால் நாங்கள் சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபடுவோம்.

தற்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வலைப்பின்னல் ஊடான லொத்தர் சீட்டிழுப்பு முறை தடை செய்யப்படவேண்டும். அத்துடன் நாட்டில் உள்ள நவீன சந்தைகளிலும் ச.தொ.சாக்களிலும் மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவது தடைசெய்யப்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வெலிக்கடையில் எஸ்.பியை ரணில் சந்தித்துப் பேசினார்!

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசினார்.

சிறை அதிகாரிகளின் அனுமதியைப் பெற்று, நண்பகல் 12 மணியளவில் வெலிக்கடைச் சிறைக்குச் சென்ற ரணில், அங்கு தனிக் கூண்டில் சிறைவைக்கப்பட்டுள்ள எஸ்.பி.திஸநாயக்கவைச் சந்தித்து உரையாடினார்.

இதேவேளை நேற்று முன்தினம் வெலிக்கடைச் சிறைக்குச் சென்ற எஸ்.பி.திஸ நாயக்கவின் மனைவி தாமர திஸநாயக்க மற்றும் மகன்மாரைச் சிறைச்சாலைக்குள்ளே அனுமதிக்காமல் சிறை அதிகாரிகள் வாசலில் வைத்தே திருப்பி அனுப்பினர்.

இவர்கள் வந்திருப்பதைத் தொலைபேசியூடாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்து, அவர்களின் உத்தரவைப் பெற்றுக் கொண்ட சிறைச்சாலை அதிகாரிகள், எஸ்.பி.திஸநாயக்கவின் மனைவி தாமர திஸநாயக்க மற்றும் மகன்மாரை சிறைக்குள் அனுமதிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீதியமைச்சின் சட்ட முறைகளின்படி ஒரு மாதத்தில் ஒரு முறைதான் கைதியொருவரைப் பார்வையிடலாம் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்ததையடுத்து, பகல் 10.45 மணி முதல் சுமார் 45 நிமிடங்களாக சிறைச்சாலைக்கு வெளியே காத்திருந்துவிட்டு திஸநாயக்க குடும்பத்தினர் வீடு திரும்பினர்.

இதேவேளை, நேற்று முன்தினம் காலை சிறைக்குச் சென்ற எஸ்.பி. திஸநாயக்கவின் சட்டத்தரணிகளையும், அதிகாரிகள் உள்ளே அனுமதிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வரவு செலவு திட்டம் 3 ஆவது வாக்கெடுப்பில் நிறைவேறியது!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவு திட்டத்தின் மூன்றாவது வாக்கெடுப்பு நேற்று நாடாளுமன்றத்தில் 97 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.

வரவு செலவுத்திட்டத்தை ஆதரித்து 113 உறுப்பினர்களும், எதிர்த்து 18 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

ஜாதிகஹெல உறுமய, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஆகிய அரசாங்கத்துடன் இணைந்து வாக்களித்தன.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். ஐ.தே.கட்சி வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

## எழுத்தாளர்..

கலாநிதி சொக்கன் சிறுகதை, நாவல், கட்டுரை, சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்பு, கவிதை என பல்வேறு இலக்கியப் படைப்புக்களையும் படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், இலக்கண நூல்கள், திருக்குறளுக்கான விளக்கவுரை போன்றவற்றையும் இவர் எழுதியுள்ளார். இவரது இடைக்கால படைப்புக்காக அண்மையில் 'சாகித திய ரத்னா' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவர் பல்வேறு விருதுகள், பட்டங்களைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மறைந்த எழுத்தாளர் சொக்கனின் பூதவுடல், யாழ். மாநகர சபைக்கு அருகிலுள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அவரது இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் எதுவும் அறிவிக்கப்படாதபோதும், பெரும்பாலும் நாளையே நடைபெறும் என உறவினர்கள் தெரிவித்தனர்.

## மனித உரிமை...

தித்து எமது நிலைப்பாட்டை விளக்கினோம். அவர் ஜனாதிபதியைச் சந்திக்க ஏற்பாடு செய்து தருவதாக உறுதியளித்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, ஜனாதிபதியை இரண்டு வார காலத்துக்குள் சந்திக்க ஏற்பாடு செய்து தருமாறு அந்த மகஜரில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# தொடரும் வன்முறைகளால்...

செயல்கள் காரணமாக சர்வதேச கண்காணிப்பாளர்கள் சோதனைச்சாவடிக்கு செல்லாமையே இதற்குக் காரணமாகும்.

எனவே விடுதலைப்புலிகளும், அரசாங்கமும் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்க வேண்டும். இது மக்களிடையே நம்பிக்கையை கட்டியெழுப்ப உதவும்.

உறுதியான கலந்துரையாடல்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் இன்னமும் தமது கடமையை மேலதிகமாக செய்தால் ஏற்படும் போரை தவிர்த்துக் கொள்ளலாம்.

போரானது மக்கள் மத்தி யில் தேவையற்ற வகையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே போரானது மீள ஆரம்பிக்காத வகையில் போர் நிறுத்தமானது உறுதியான வகையில் பேணப்பட வேண்டும்.

ஆகையால் அதற்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென தேசிய சமாதானப் பேரவை தெரிவித்துள்ளது.

aat & CAT
June 2005 பரீட்சைக்குரிய விரிவுரைகள் நாளை காலை 11.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. விரிவுரைகள் English Medium இல் மட்டும் நடைபெறும்.
பரீட்சைக்கு உரிய முறையில் Special English Lectures நடாத்தப்படும்.
Office Time:- Sat. & Sun - 9.00 a.m. - 3.00 p.m
CAREER.COM INSTITUTE
NO.79, MAIN STREET, JAFFNA.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தமிழ் எழுத்தாக்கத்திறன் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம் வெளியானது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வெளியீடாகிய விளக்கு 2004 ஆம் ஆண்டு உலக ஆசிரியர் தினத்தையொட்டி நடத்திய தமிழ் மொழி எழுத்தாக்கத் திறன் போட்டியில் பரிசில் பெறுவோர் விபரம் வெளியாகியுள்ளது.

கட்டுரை எழுத்தாக்கப் போட்டியில் 1 ஆம் இடம் - மு.மோகனேந்திரன் (ஈச்சந்தீவு விபுலானந்த வித்தியாலயம்), 2 ஆம் இடம் - கே. ஞானரத்தினம் (சிவானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு), 3 ஆம் இடம் - கோகுல வாணி தேவராஜா (மல்லாவி மத்திய கல்லூரி).

சிறுகதை ஆக்கப் போட்டியில் 1 ஆம் இடம் - யோசெப் ஆரோக்கியம் குருஸ் (மடு வலயக் கல்விப் பணிமனை, ஆண்டாங்குளம்), 2 ஆம் இடம் - மு.இராசநாயகம் (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்), 3 ஆம் இடம்- இரத்தினேஸ்வரி சிவசிதம்பரம் (முகாமைத்துவ உதவியாளர் கண்டாவளை கல்விக் கோட்டம், கிளிநொச்சி)

கவிதை ஆக்கப் போட்டியில் 1 ஆம் இடம் - எம்.வீ.எப்.ஸ்ுல்.ஃபிகா (ஹ/அல் கஸ்ஸாவி மத்திய கல்லூரி, அட்டுலுகம, பண்டாரகம), 2 ஆம் இடம் - அருட்சகோதரி ஞா.இமல்டா சுபாஜினி (தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா), 3 ஆம் இடம் - இரத்தினேஸ்வரி சிவசிதம்பரம் (முகாமைத்துவ உதவியாளர், கண்டாவளை கல்விக் கோட்டம், கிளிநொச்சி)

விமர்சனம் எழுதுதல் போட்டியில் கா.சசிதரன் (அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)

கட்டுரை எழுதுதல், சிறுகதை ஆக்கம் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு முறையே தலா 10 ஆயிரம் ரூபா, 7500, 5 ஆயிரம் ரூபாவும் -

கவிதை ஆக்கம் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு முறையே 5 ஆயிரம், 3 ஆயிரம், 2 ஆயிரம் ரூபாவும், விமர்சனம் எழுதுதல் போட்டியில் வெற்றியீட்டியவருக்கு 5 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படும.


போட்டிகளில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளதோடு, வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் யாவும் 2005 ஜனவரி மாதத்தில் வழங்கி கௌரவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதெனவும், கல்வி மேம்பாட்டு பேரவையினர் அறிவித்துள்ளனர்.











வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற திருக்குறள் மனனப் போட்டி பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினரை மாணவிகள் வரவேற்பதையும், பிரதம, சிறப்பு விருந்தினர்கள் மேடையில் அமர்ந் திருப்பதையும், திருக்குறள் மனனப் போட்டியில் முதல் இரு இடங்களையும் பெற்ற சகோதரிகளுக்கு முதன்மை விருந்தினர் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# 2 தொகுதி பட்டதாரிகளுக்கும் ஜனவரியில் நிரந்தர நியமனம்

பட்டதாரிகளை அரசாங்க சேவையில் இணைக்கும் திட்டத்தின் கீழ், பயிற்சி பெற்றுவரும் இரண்டு கட்டப் பயிற்சியாளர்களுக்கும் ஜனவரி முதல நியமனம் வழங்கப்படவுள்ளதாக வட - கிழக்கு மாகாண முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி பி.சிவலிங்கம் தெரிவித்தார்.

தற்போது பயிற்சிபெற்று வரும் பட்டதாரிகள் - அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த மாதம் 31 ஆம் திகதி பயிற்சி வகுப்புக்கள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டு, ஜனவரி முதல் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## பேச்சுப்போட்டியில்

# யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மனித உரிமை, நல்லாட்சி, ஜனநாயக உரிமைகள் என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு, பவ்ரல் அமைப்பு அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக்கிடையே நடத்திய பேச்சுப் போட்டியில் மாவட்ட ரீதியில் இடம்பெற்ற முதற் சுற்றுப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களான க.தர்ஸன் (சிரேஷ்ட பிரிவு), ம.அருளினியன் (கனிஷ்ட பிரிவு) ஆகியோர் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்கள் இன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளன.

# சின்னஞ்சிறு செய்திகள்

## மரத்திலிருந்து வீழ்ந்து காயம்!

(யாழ்ப்பாணம்)

மரத்திலிருந்து தவறிவீழ்ந்து வெவ்வேறு இடங்களைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

சாவகச்சேரியைச் சேர்ந்த ரி. சுகந்தன் (வயது 14), கச்சாயைச் சேர்ந்த எஸ்.கிருபாகரன் (வயது-13) ஆகியோரே சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (29)

## நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை விபத்துத் தடுப்புச் சங்கமும், வடபிராந்திய போக்குவரத்துச் சபையும் இணைந்து நடாத்தும் 'சாரத்தியமும் சவால்களும் சாமர்த்தியமும்' நூல் அறிமுக விழா யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நாளை காலை 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதனும், கௌரவ விருந்தினராக துணைவேந்தர் சு.மோகனதாஸும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(25)

## ஊக்குவிப்பு தொகை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபையால் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கும், க.பொ.த உயர்தரத்தில் பல்கலைக்கழகம் சென்ற வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கும் ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் செல்வரட்ணம் தெரிவித்தார்.

(72)

## தையல் இயந்திரங்கள் அன்பளிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட மூன்று மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்குத் தலா இரண்டு தையல் இயந்திரங்கள் வீதம் வழங்கப்பட்டுள்ளன.

2004 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்தே இந்தத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகர, கிராம அபிவிருத்திச் சங்கம், சூரியகாந்தி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நாவற்காடு, வரணி, இயற்றாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுக்கே இவ்வாறு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தென்மராட்சி பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் தெரிவித்தனர். (25)

## விடைத்தாள் மதிப்பீடு

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் தரம் 11 மாணவர்களுக்கான தமிழ்மொழி பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு, இன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்குச் சமூகமளிக்குமாறும், ஒவ்வொரு பாடசாலைகளும் தத்தமது பாடசாலைகளுக்கான புள்ளி விபரங்ளைப் பெற்றுக்கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் வி. செல்வராஜா அறிவித்துள்ளார். (29)

## பன்னவேலை கைப்பணிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பற்றீசியன் தொழில் பயிற்சி நிறுவனத்தில் பன்னவேலைக் கைப்பணிப் பயிற்சிநெறி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியில் 16 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட யுவதிகள் சேர்ந்து கொள்ளலாம்.

பயிற்சிக் காலத்தின்போது, பயிறசியில் ஈடுபடுபவர்களுக்குப் பிரயாணப்படி, மதிய உணவு என்பன வழங்கப்படும் என்றும் பயிற்சிமுடிவில் பன்னவேலைக் கைப்பணி தொடர்பான பொருள்களை உற்பத்தி செய்து விற்பனையில் ஈடுபடுவதற்கான தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூரை விரிப்புக்கள் வழங்கல்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட வெள்ளத்தால் கடுமையாகப் பாதிப்படைந்தோருக்கு, யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் கூரை விரிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வெள்ளத்தால் கடுமையாகப் பாதிப்படைந்த 228 குடும்பங்களுக்கே இவை வழங்கப்பட்டு வருகின்றன. (25)

## வகுப்பறை தொகுதி திறப்பு விழா

(வடமராட்சி)

அபிவிருத்திக்கும், ஒத்துழைப்பிற்குமான சுவிஸ் நாட்டு நிறுவனத்தால் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அமைக்கப்பட்ட ஆரம்பக் கல்வி பிரிவுக்கான வகுப்பறைக் கட்டடத் தொகுதி, இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இலங்கைக்கான சுவிஸ் நாட்டுத் தூதுவர் டினோ றெக்சொனியினால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

(29,25)

## கூட்டுறவு நகர் ஆரம்பவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுநகர் எதிர் வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையன்று மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : ஜெ.கீர்த்திகா
முகவரி : திருநெல்வேலி.

அகவை மூன்று



பெயர் : தே.ரொபின்சன்
முகவரி : பண்டத்தரிப்பு.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

# நவீன உற்பத்திகளை கற்றுக்கொடுத்து பொருண்மியம் மேம்பட உதவவேண்டும்

## பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன்

கிளிநொச்சி மாவட்ட விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியாக 65 சிறந்த விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட விவசாய விரிவாக்கத் திணைக்கள அலுவலகத்தில், கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் சீ.ஆனந்தராசா தலைமையில் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை சிறந்த விவசாயி செ.நவரத்தினம், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், விவசாயத்திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் சீ.ஆனந்தராசா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை அரசியற்துறை நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த மயூரன் ஏற்றிவைத்தார். தலைமையுரையை ஆனந்தராசா நிகழ்த்த, வரவேற்புரையை எஸ்.என்.செல்வராசா நிகழ்த்தினார்.

நிகழ்வின் கருத்துரைகளை கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளர் ந.கந்தசாமி, தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், முல்லைத்தீவு மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் கோகுலதாசன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோர் நிகழ்த்தினர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில்-

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகள் போரின் தாக்கத்தால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு, விவசாய உற்பத்திகளை மேற்கொண்டு வந்தனர். இவ்வாறான விவசாயிகளுக்கு நவீன உற்பத்தி, பராமரிப்பு போன்றவற்றை கற்றுக்கொடுத்து, இலகுவான முறையில் விவசாயிகள் விவசாயத்தை மேற்கொண்டு பொருண்மியத்தை மேம்படுத்த உதவவேண்டுமெனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி அரச அதிபர் கருதத்துத் தெரிவிக்கையில் - போரினால் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருமக்கள் மற்றும் விவசாய அமைப்பினர் தனியாக காசோலைக்கு கையொப்பம் வைக்கும் தலைவர்களாக இருக்கக்கூடாது.

அத்தோடு எமது விவசாய நடவடிக்கையை நிறுவன மயமாக்க வேண்டும். உலகநாடுகளில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து, உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான சந்தை வாய்ப்பு இல்லாதபோது அவற்றை பொதிசெய்து வேறு இடங்களுக்கு ஏற்றுமதி செய்து வருமானத்தை தேடிக்கொள்கிறார்கள்.

இதுமட்டுமல்லாது விவசாயிகள் தனியாக ஒரு பயிரை மட்டும் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தலுக்காக சிரமப்படக்கூடாது.

விவசாயத்தில் பல தொழில்நுட்பங்களை அறிந்து, பொருளாதாரத்தை மேம்படுத்தவேண்டும் என அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களின் பணத்தை வீணாக செலவுசெய்யக்கூடாது. அக்கராயன் கமநல சேவை நிலையத்தில் பல லட்சம் ரூபா பெறுமதியான கிருமிநாசினி, மருந்து வகைகள் விற்பனையின்றி கடந்த இரண்டு வருடங்களாக இருப்பில் இருக்கிறது. இது போன்ற சம்பவங்கள் நடைபெறக் கூடாது.

விவசாய நடவடிக்கையில் குறைந்த செலவில் உற்பத்தித் திறன் பெறுதல், பொருட்களைச் சந்தைப்படுத்தல் போன்றவற்றில் தாமாகவே முன்னின்று உழைக்க ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சிறந்த விவசாயிகளுக்கு சான்றிதழ்கள், 600 ரூபா பெறுமதியான காசோலை, கிருமிநாசினி தெளிக்கும்போது அணியும் பாதுகாப்பு உடைக் கவசம் போன்றவை வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.



## வன்னிப் பதிவுகள்

### தபால் விநியோகம் ஸ்தம்பித நிலையில்

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகளில் வீதிகள் சீரின்மையால், சீரானமுறையில் தபால் விநியோகம் மேற்கொள்ளமுடியாத நிலை உள்ளது.

மாந்தை கிழக்கு, கொம்புவைத்த குளம், சிறாட்டிக்குளம், மூன்று முறிப்பு, கிடாய்பிடித்தகுளம் ஆகிய பிரதேசங்களின் வீதிகள் சைக்கிளில்கூட பயணிக்கமுடியாத நிலையில் மிகமோசமான நிலையில் பழுதடைந்துள்ளமையால், தபால் சேவையை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக நட்டாங்கண்டல் உப தபாலதிபர் தெரிவித்தார்.

## கிளிநொச்சி வலய ஆசிரியருக்கான செயலமர்வு ஆரம்பமாகியது!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

கிளிநொச்சி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் 2005 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றவுள்ள உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு, ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு - நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. இந்தச் செயலமர்வு எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் 2005 ஆம் ஆண்டு தரம் ஒன்று மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு, கடந்த புதன் கிழமை கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனையின் ஆசிரியவள நிலையத்திலும், நேற்றுமுன்தினம் பரந்தன் இந்து மகா வித்தியாலயத்திலும் நடைபெற்றது.

## தமிழீழ காவல்துறையினருக்கு செஞ்சிலுவைச்சங்க குழு பாராட்டு

(கிளிநொச்சி)

தமிழீழ காவல்துறையின் சீர்திருத்தப் பிரிவை பார்வையிட்ட, சர்வதேச செஞ்சிலுவைக் குழு உறுப்பினர்கள் அவர்களைப் பாராட்டினர்.

சர்வதேச செஞ்சிலுவைக்குழு உறுப்பினர்கள் தமிழீழ காவல் துறையின் சீர்திருத்தப் பிரிவையும், சீர்திருத்த நடவடிக்கைகளையும் பார்வையிட்டு, சீர்திருத்த நடவடிக்கை தொடர்பாகக் கேட்டறிந்ததுடன், இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளையும் பார்வையிட்டனர்.

மேலும் இவர்கள் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் வன்னி வதிவிடப் பிரதிநிதி ரசல் பேனாட், வெளிக்கள அலுவலர் தங்கன் ஆகியோர், தமிழீழ காவல்துறையின் குற்றப்புலனாய்வுப் பிரிவுக் கண்காணிப்பாளர் கானகன், குற்றப்புலனாய்வுப்பிரிவுப் பொறுப்பாளர் பகீரதன், சீர்திருத்தப்பிரிவுப் பொறுப்பாளர் சிவநேசராசா, உபபரிசோதகர் ஞானமுத்து, மற்றும் தமிழீழ காவல்துறை உறுப்பினர்களை சந்தித்துக் கலந்துரையாடினர்.

காவல்துறை உறுப்பினர்களுடன் கலந்துரையாடிய சர்வதேச செஞ்சிலுவைக்குழு உறுப்பினர்கள், காவல்துறையினரின் சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு பாராட்டுத் தெரிவித்தனர்.





கிளிநொச்சி - தென்னிந்திய திருச்சபையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஒளி விழாவில் இடம்பெற்ற கலை நிகழ்வை முதலாவது படத்திலும், இந்த நிகழ்வில் கலந்துகொண்டோரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### மன்னாரில் லொறி மோதியதில் ஒருவர் காயம்

(மன்னார்)

மன்னார் - கட்டை அடம்பன் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

நேற்றுமுன்தினம் மாலை 2.30 மணியளவில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவேளை, லொறி ஒன்றுடன் நேருக்குநேர் மோதியதில் சைக்கிளில் சென்ற எம்.அந்தோனி (வயது 50) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### மோசமான நிலையில் சேதமடைந்த பொதுமண்டபம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - கல்மடு நகரில் அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுமண்டபம் - மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது.

போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்தால் அமைக்கப்பட்ட இந்தப் பொது மண்டபம், தரமற்ற முறையில் அமைக்கப்பட்டமையால் மிக மோசமான நிலையில் சேதமடைந்து காணப்படுவதால், இந்தக் கட்டடத்தில் இயங்கி வந்த முன்பள்ளி கற்றல் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

## கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் கிராமசேவையாளர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடல் - கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மேலதிக அரச அதிபர் தி. வேதநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மூவாயிரத்து 300 வாக்காளர் பதிவுகள் சரியான முறையில் கிடைக்கப்பெற்றதாகவும், அவை பரிசீலிக்கப்பட்டு 6 ஆயிரம் படிவங்களில் சிறு தவறுகள் இருப்பதாகவும், அவை திருத்தம் செய்யப்படவேண்டிய வழிமுறைகள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

இத்திருத்தத்தின் பொருட்டு உரிய கிராம அலுவலர்களிடம் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (09)

## மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களை மேம்படுத்த நடவடிக்கை

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் யோ.பரமேஸ்வரி ஈடுபட்டுள்ளார்.

யுத்த சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேச சனசமூக நிலையங்களைப் புனரமைப்புச் செய்து இயங்கவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 21 சனசமூக நிலையங்கள் இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 11 சனசமூக நிலையங்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்திலும், மேலும் 10 சனசமூக நிலையங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் இனங்காணப்பட்டுள்ளன.

இந்த சனசமூக நிலையங்களின் புனரமைப்புச் சம்பந்தமான கலந்துரையாடல்- கடந்த புதன், வியாழன் ஆகிய இரு தினங்கள் நடைபெற்றது. இதில் சனசமூக நிலையங்கள் தரம் பிரிக்கப்பட்டு அவற்றுக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளுக்கு நிதி வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (14)

### சந்தேக நபர்கள் நான்கு பேர் கைது

வவுனியா - செட்டிகுளம் பிரதேசத்தில் காட்டுயானை ஒன்றைக் கொலைசெய்த நான்குபேர் வவுனியா நீதிமன்றத்தால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தப் பிரதேசத்தில் கிறிஸ்தவ குளம் எனும் இடத்தில் காட்டுயானை ஒன்றைச் சுட்டுக் கொலை செய்து புதைத்த சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றதையடுத்து, வவுனியா பொலிஸாரால் சந்தேக நபர்கள் நான்குபேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

### தபால் பெட்டிகள் இல்லை

பரந்தன் சந்தியிலிருந்து முரசுமோட்டை வரையான பிரதேசங்களில் தபால் பெட்டிகள் இல்லாது உள்ளன.

கோரக்கன்கட்டு, ஊரியான், பன்னங்கண்டி ஆகிய பிரதேசங்களில் 1500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்தப் பிரதேசங்களுக்கான தபால் பெட்டிகள் அமைக்கப்படாமையால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.